# திசை
THISAI

திசை 2 | 2-2-1990 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 5-00 | பக்கங்கள் 14 | முகம் 3


## இந்தியா — பாகிஸ்தான் மோதல் மீண்டும் மூளுமா

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மீண்டும் யுத்தம் நிகழக் கூடிய சூழ்நிலை உருவாகி வருவதாக செய்திகள் கூறுகின்றன.

இருசாராரும் போர்க்களத்தில் மோதிக் கொள்வதற்கு ஒருவரையொருவர் முந்திக் கொள்ள வேண்டிய தேவைகள் — அணுவாயுதப் பிரயோகத் தேர்ச்சி, எதிரியின் அணுவாயுதத் திறனை அழித்தல் — உள்ளன.

இலங்கையில் இராணுவரீதியிலும், அரசியல் ரீதியிலும் ஏற்பட்டுள்ள தோல்விகளை ஈடுசெய்யும் தேவையும் இத்தகைய யுத்தத்திலீடுபடுவதற்கு இந்தியாவைத் தூண்டலாமென்றும், அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

# 'சூழு மோதல் என எமது போராட்டத்தை கொச்சைப்படுத்த வேண்டாம்'

**கொழும்புத்துறை - மணியம்தோட்டம் ஈ. என். டி. எல். எவ். முகாமின் மீது சென்ற 21ஆம் திகதி ஞாயிறு அதிகாலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் பின், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திசைக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியில் இவ்வாறு கூறினர்.**

"கொழும்புத்துறை - மணியந்தோட்டத்தில் விடுதலைப் புலிகள் ஈ.என்.டி.எல்.எவ். மீது மேற்கொண்ட தாக்குதலைக் குழுக்களுக்கிடையிலான சண்டை அல்லது மோதல் என்று வர்ணிப்பது தவறாகும்" என்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் 'டொமினிக்' எமது நிருபரிடம் கூறினார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:

"ஈ. என். டி.எல்.எவ். மீது நாம் மேற்கொண்ட தாக்குதல், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தின் ஒரு வடிவமாகும். பதவி ஆசைபிடித்தவர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு, எமது சிறார்களைப் பலவந்தமாகப் பிடித்து, அவர்கள் கையில் ஆயுதத்தைத் திணித்து, எமது கலாசாரத்தையழித்து, பொம்மையரசை ஏற்படுத்திப் பலப்படுத்தப் பார்க்கிறார்கள். இப்படியான பொம்மை அரசை நிக்கரகுவாவில், ஹொண்டிராஸ்களை வைத்துக்கொண்டு அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் நடைமுறைப்படுத்தப் பார்க்கிறார்கள். ஆப்கானிஸ்தானிலும் இதே நிலைதான். எமது போராட்டமானது இந்தியாவின் பொம்மையரசை ஏற்றுக்கொள்கிற சக்திகளுக்கும் எதிர்க்கின்ற சக்திகளுக்கும் இடையிலான போராட்டமாகும்" என்றார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், "ஈ.என். டி. எல். எவ். வினர் கொழும்புத்துறையிலும், சுற்றாடலிலும் உள்ள கிராமங்களில் கொள்ளைகளிலும், சமூக விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தனர். அத்துடன் இங்குள்ளவர்களிடமிருந்து பலவந்தமாகப் பணத்தைப் பறித்ததுடன், வாங்கிய ஆயுதங்களை இந்தியாவுக்குக் கடத்தவும் எத்தனித்திருந்தனர். ஒருவகையில் பார்த்தால் மக்களின் அவலங்களும் அவர்கள் மீது நாம்கொண்ட தாக்குதலுக்குக் காரணமாய் அமைந்தது"

"தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்காலத்திட்டம் எப்படி அமையும்?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், "தெற்கில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்றால் அங்கு இனவாதத்தைக் கிளப்ப வேண்டும். இனவாதத்தின் தீவிரப்போக்கு தெற்கில் அரசின் பலத்தைத் தீர்மானிக்கிறது. வடக்கிலும் இதே நிலைதான். இனவாதத்தை வளர்ப்பதற்கு வடக்கிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தூபம் போட்டது".

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"இரண்டு பக்கத்திலும் - இனவாதத்தையும், இந்தியாவையும் நாம் எதிர்த்தோம். எங்களைச் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையும், தமிழ்மக்களையும் அவர்கள் தற்போது தேசபக்தி மிக்கவர்கள் என்று சொல்கிறார்கள். இனிமேல் வகுப்புவாதம் எடுபடாது. வகுப்புவாதத்தைக் கிளப்பினால் சண்டையையும் எதிர்கொள்ள நாம் தயார்." தமிழரது உரிமைகளைத் தந்து எம்மையும்சேர்த்து ஆள விரும்பினால், நாம் சேரத் தயார். நாம் நிராயுதபாணிகளாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை மாற்றம்: யாருடைய தலைகள் உருளும்?

இம்மாத முடிவில் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்படுமென, அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

பெப்ரவரி 20ஆம் திகதி, நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு தொடங்கும் போது, அமைச்சரவையில் புதிய முகங்களைக் காணமுடியுமென்றும் ஆரூடம் கூறப்படுகிறது.

அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த தாம் விரும்புவதாக ஜனாதிபதி ஏற்கெனவே அறிவித்துள்ளது தெரிந்ததே.

புதிய முகங்களைக் காண்போமா அல்லது பழைய முகங்களை புதிய பதவிகளில் காண்போமா என்பதுதான் கேள்வி.

யாருடைய தலைகள் உருளும் ?

பழைய கள்ளு, புதிய 'பிளா' என்ற கதையாகத்தான் பெரும்பாலும் இந்த அமைச்சரவை மாற்றம் முடியுமென, அரசியல் அவதானிகள் பேசிக்கொள்கின்றனர்.

## கருணாநிதி கண்டனம்

அடுத்த இரண்டு மாதங்களில் இலங்கையிலிருந்து முழுவதுமாக இந்தியப்படை வெளியேறுமுன்னர், வட - கிழக்கு மாகாணத்திற்குக் கூடிய அதிகாரத்தைப் பெற்றுத் தரும் இந்திய அரசின் முயற்சிக்கு வெற்றி கிடைத்து விடுமென, முதலமைச்சர் மு. கருணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் தவறான தகவல்களையும் கருத்துகளையும் பரப்பி இந்திய அதிகாரிகள் பொய்ப் பிரசாரம் செய்து வருவதாகக் கண்டித்திருக்கும் அவர், இப்பிரச்சினை பற்றி தேசிய ரீதியிலும் தமிழ்நாடு மட்டத்திலும் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட வேண்டுமென அண்மையில் ராஜீவ் காந்தி தெரிவித்திருப்பதனையும், கண்டித்தார்.

## நட்புறவு ஒப்பந்தமும் படை விலகலும்

இந்தியப்படையை இலங்கையில் இருந்து மார்ச் மாத முடிவுக்குள் முற்றாக வெளியேற்ற வேண்டுமென்று இலங்கை துரித நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையில், இலங்கை இந்திய நட்புறவு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இந்தியா அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஆனால் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சில அம்சங்கள் குறித்து இலங்கை அரசு அதிருப்திப்பட்டுள்ளதே இது கைச்சாத்திடப் படுவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை அண்மையில் கொழும்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஷெல் தாக்குதல்

சுன்னாகம் ரயில் நிலையத்துக் கருகாமையில் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகளுக்கும் இந்தியப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, இந்தியப் படையினர் மக்கள் வதியும் இடங்களை நோக்கி ஷெல்தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதனால், ஏழாலைப்பகுதியிலும் இன்னும் அதைச்சுற்றிய வட்டாரங்களிலும் பலர் காயமடைந்துள்ளதோடு மூவர் மரணமாகியும் உள்ளனர்.

இத்தாக்குதல் நிகழ்ச்சியின் போது, இந்தியப்படையினர் தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் நிலவிய பதற்ற நிலைமை காரணமாக, ஜனவரி 26 ஆம் திகதிக்குரிய திசை வெளிவரவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

5, 6, 7, 8ஆம் பக்கங்கள் ஏற்கெனவே அச்சிடப்பட்டு விட்டதால், அவற்றில் 26 ஆம்திகதி இடம்பெற்றுள்ளது.

— ஆர்.



இந்தியப்படை வெளியேறியபின் யாழ். பஸ் நிலையப்பகுதி

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

# திசை
THISAI

சந்தா விபரங்கள்
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா 300/-
அரைவருடம்–ரூபா 150/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி :

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


## 16-1-90 செவ்வாய்

அடுத்த மாதம் இலங்கை – இந்திய நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என, இந்தியத் தூதர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார் ☐ கொழும்பில் பெண் லெப்டினென்ட் ஒருவரை, சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக்கொன்றார். பின்னர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்ய முயன்றார். காதல் தகராறே காரணமாம் ☐ லக்ஸ்பிறேயின் விலை ரூபா 6/50 ஆல் உயர்ந்தது ☐ 'கறுப்புக் காகங்கள்' என்ற பெயரில் புதிய இயக்கமொன்று தென்பகுதியில் தோன்றியுள்ளதாக செய்தி வெளியானது ☐

## 17-1-90 புதன்

கடுகண்ணாவையில் நடந்த மோதலில் பொலிஸார் சுட்டதில் இனந் தெரியாத 5 பேர் பலியாகினர் ☐ விடுதலைப்புலிகள் முஸ்லிம் கொங்கிரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என, அதன் தலைவர் அஷ்ரப் கருத்து வெளியிட்டார். ☐ இலங்கையில் உள்ள ஒருவகை பலாப்பழம் தான் இனிமையானது என, மலேசிய விவசாய நிபுணர் என். சகாதேவன் குறிப்பிட்டார் ☐ மாகாண சபைகள் கலைக்கப்பட்டால் தேர்தலில் போட்டியிடுவது பற்றி சுதந்திரக் கட்சி ஆலோசிக்குமென, சிறிமா தெரிவித்தார் ☐

## 18-1-90 வியாழன்

வட — கிழக்கு இணைப்பு பற்றிய சர்வஜன வாக்கெடுப்பு ஜூன் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார். சர்வதேச மன்னிப்புச் சபை ஒரு பயங்கரவாதஇயக்கம் என்றும், அரசியல் கட்சிகளின் ஆலோசனையின் பின்பே இலங்கை — இந்திய நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனவும் அவர் சொன்னார் ☐ வட— கிழக்கு மாகாணசபையின் இரு உறுப்பினர்களின் கொலைகளைக் கண்டித்து, கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிட்டது ☐ ஹொரணையில் தோட்டவலயங்களில், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள், கோஷ்டியொன்றினால் கொள்ளையடிக்கப்பட்டன;

## 19-1-90 வெள்ளி

அரசியல் அமைப்பின் 6 ஆவது திருத்தத்தை நீக்குமாறு அரசாங்கத்தைத் தமது இயக்கம் கோரியிருப்பதாக விடுதலைப் புலிகளின் மட்—அம்பாறை பிரிவு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் தெரித்தார் ☐ வெளிநாட்டு அமைச்சர் ரஞ்சன் "பயங்கரவாத ஸ்தாபனம்" எனத் தம்மீது குற்றஞ்சாட்டியதற்கு, சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்தது ☐

## 20-1-90 சனி

பேசாலையில் சுவிஸ் அரசின் உதவியுடன் மீன்பிடி பயிற்சிக் கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் செய்தி வெளியானது ☐ கொள்கை விளக்க உரை நிகழ்த்துவதற்காக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி மட்டக்களப்பு சென்றார். ☐

## 21-1-90 ஞாயிறு

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன யாழ். விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகள் பற்றி ஆராய்ந்தார் ☐ ஞாயிற்றுக்கிழமை அரியாலையில் பெரும் மோதல் நடைபெற்றது. இதில் (?) பேர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

## 22-1-90 திங்கள்

அரியாலை மோதலைத் தொடர்ந்து யாழ்நகரில் பதற்றமும் பீதியும் நிலவுகிறது. நகரில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டது ☐ புலிகளைப் பொறுத்தவரை முஸ்லிம் — தமிழர் என்ற பேதம் கிடையாதென கல்முனைக் கருத்தரங்கில் யோகி தெரிவித்தார் ☐


**நல்ல ரக மா விதைகள்**

நல்ல ரக மா விதைகள் உடன் தேவை.

உடனே தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
C-11



**For Sale**

Reconditioned
HONDA, CHALY

16, 3rd Cross Street,
Jaffna. C-6






**Typewriters**
தட்டச்சு இயந்திரங்கள்
வாங்கவும், விற்கவும்,
சிறந்த முறையில்
திருத்தவும் நாடுங்கள்

**Fudo Enterprises**

39/17, Power House Road,
3rd Lane Jaffna.
(S. P. சாமி & Co.,
அருகாமையில்) C-9



**வைத்திய சேவை**

நாள்பட்ட வாதம்,
நரம்புத்தளர்ச்சி, அஸ்மா,
மலடு, மற்றும்
ஏனைய சகல நாட்பட்ட
ரோகங்களுக்கும் சிகிச்சை
அளிக்கப்படும்.

தொடர்பு:

**ஸ்ரீ சத்தியா பொலி கிளினிக்**

சென். பற்றிக்ஸ் வீதி,
லீனஸ் கட்டிடம்,
யாழ்ப்பாணம். C-10



## Jaffna College Institute of Technology, Vaddukoddai.

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
TECHNICAL COMPETANCE IS THE KEY TO ECONOMIC SELF RELIANCE

**Full Time Technical Educational Institute Offering Following Facilities**

★ Fully Equipped Laboratories
★ Hostel Facilities for Male & Female Students
★ Library
★ Sports, Games, & Cultural Activities

**பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
March 1990 ஆரம்பமாகின்றன :**

**1. TECHNICIAN DIPLOMA COURSES**
(ஆங்கில மூலம்)

NDT தாரதரத்திற்கேற்பவும் City&Guilds (London) பாடநெறிகளுக்கேற்பவும் அமைக்கப்பட்டது

i) Electronics & Communication
ii) Mechanical Engineering
iii) Electrical Engineering
iv) Civil Engineering ( 2 Years )

* கல்வித்தகைமை : G. C. E. (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

* காலம் : 3 வருடங்கள்

**2. ADVANCED DIPLOMA IN COMPUTING**
(ஆங்கில மூலம்)

Syllabus includes British Computer Society ( B. C. S) Part I and Australian Computer Society ( A. C. S) examinations.

* கல்வித்தகைமை : G. C. E. (O/L) 5 subjects including Maths & English & G. C. E. (A/L) one subject.

* Duration : One Year

**3. ENGINEERING COURSE**

Full time, preparing students for E.C.E (London) Part I & II exams.
Week end courses could be arranged.
Qualification : G C E (A/L) Maths with 3 passes
Lectures, Practicals by qualified engineers.

**4. DIPLOMA COURSES** (ஆங்கில மூலம்)

i) Draughtsmanship (Civil)
ii) Computer Programming & Data Processing (BASIC, COBOL & dBASE III PLUS) Practicals on I. B. M PC, AT & MAT 386 Industrial Controller

* கல்வித்தகைமை : G. C. E. ( O/L ) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

* காலம் : ONE YEAR

**5. TECHNICIAN CERTIFICATE COURSES**
(ஆங்கில மூலம்)

i) Radio & T. V. Servicing
ii) Automobile Technology

* கல்வித்தகைமை : G C. E. (O/L) with MATHS & SCIENCE

* காலம் : ONE YEAR

முக்கிய குறிப்பு : நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 5/= செலுத்தி நேரடியாகவோ அல்லது 1/= பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 15-2-90**
**SELECTION AFTER INTERVIEW**

பணிப்பாளர்.

A-16/90

# இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தது ஏன்?

ஜே. என். தீக்ஷித்

முற்றுரை

நாம் ஏன் இலங்கைக்கு வந்தோம்? — இந்தக் கேள்வி படையினரின் நடுத்தர, இளமட்டங்களில் எழுந்ததை நான் அவதானித்தேன் — என்ற கேள்விக்கு, ஓரளவு விடையளித்துள்ளேன், அதைப்பற்றி விவாதிக்கலாம். ஆனால் அந்நோத்தில் பொருத்தமான அணுகுமுறையாக எனக்குக் காணப்பட்டதையே நான் கூறியுள்ளேன். சீனாவையோ பாகிஸ்தானையோ போன்று இலங்கை, தன்மையிலேயோ அல்லது அளவிலேயோ ஓர் எதிரி அல்லத்தான். ஆனால், 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவிற்குள் பிரவேசித்தவர்கள், கைபர் கணவாய் வழியாக வரவில்லை என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்தியாவின் அதிகார அமைப்பிற்கு ஏற்பட்ட பாதிப்புகள், இந்தியாவின் தென் கரையோரப் பகுதிகளினூடாகப் புகுந்த சக்திகளே என்பதை, நாம் மறக்கக் கூடாது. கடற்படைப் பலம், விமானப்படைப் பலம், தொடர்புசாதனப்பலம் ஆகிய பலங்களைக் கொண்ட நாடுகளின் எழுச்சியினால் எமக்கு ஏற்படக் கூடிய உள்ளார்ந்த ஆபத்துக்களை, எமது கேந்திர சிந்தனை கணக்கில் எடுக்க வேண்டும். நேரடியான இராணுவப்படையெடுப்பாக அது இருக்கவேண்டும் என்ற, அவசியமில்லை. அண்டைநாடுகளில் உருவாக்கப்படக்கூடிய சூழ்நிலைகளால் எழும் அரசியல், சமூகப் போக்குகள் இந்தியாவைப் பாதித்து, எமது ஐக்கியத்தைக் குலைக்கச் செய்யலாம். இதனால் தான் இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டுள்ளதாக நான் நினைக்கின்றேன்.

தமிழரைப் பாதுகாக்கவென வந்த நாம் அவர்களை ஏன் சுடுகின்றோம்? என்ற கேள்விக்குப் பதிலளிப்பது, சற்றுக் கடினம். இலங்கையில் தமிழரின் நலன்களை நாம் பேணிப் பாதுகாப்போம் என்று கருதப்படும் போது, நாம் ஏன் தமிழரை நோக்கிச் சுடுகின்றோம்? என்னைப் பொறுத்தவரையில் அமைதிப்படை தமிழர்களோடு போராடவில்லை. கெரில்லாப் படையிலிருந்து அரசியல் சக்தியாக மாறுவதற்குச் சங்கடப்படும் கிளர்ச்சியாளர் குழுவுக்கெதிராகவே, அமைதிப்படை போரிடுகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னர், எமது படையினர் பல தடவைகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் — கொங்கோ, காசா, லெபனான், கொரியா, சைப்பிரஸ், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். ஆனால் இலங்கையிலே அமைதிப்படையின் பங்கு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதும், சிக்கல் மிக்கதும் ஆகும். எமது படையினர் முன்னர் வெளிநாடுகளுக்குச் சென்ற போது, ஒன்றில் நேரடியான இராணுவத் தலையீடாகவோ, அல்லது அமைதிப்படையாகவோ தான் சென்றது. ஆனால் முதல் தடவையாக இலங்கையில் உள்ள அமைதிப்படை, பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருக்கிறது. எமது அண்டைநாடான ஒரு சிறிய தீவின் ஐக்கியத்திலும், ஒருமைப்பாட்டின் மீதும் நாம் கொண்டுள்ள பற்றுறுதியின் அடையாளமாக அது உள்ளது.

உங்களது குளறுபடிகளாலோ அல்லது நிர்ப்பந்தங்களாலோ எமக்கு ஆபத்து ஏற்பட்டால், உங்களுக்குப் புத்தி புகட்டுவதற்கு உங்கள் நிலப்பரப்பிலே நாம் புகுவதற்குத் தயார் என்று, எமது அயல் நாட்டவருக்கு தெரிவிக்கும் ஓர் அறிவிப்பாகவும் இது அமைகின்றது. இது சற்று அகம்பாவமானதாகத் தொனிக்கலாம். ஆனால் அப்படியல்ல; இதுதான் யதார்த்த நடைமுறை அரசியல். இதன் மூலம் எமது பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படாது பார்த்துக் கொள்வதுடன் அப்படி ஆபத்தை ஏற்படுத்துபவர்கள் பக்கம் சாரா நடுநிலைக்கும் கொண்டு வரப்படுகின்றனர்.

பதினொரு ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கையிலே ஜனநாயக நிறுவனங்கள் மீளுயிர்ப்புப் பெறுவதற்கு, அமைதிப்படை உந்து சக்தியாக இருந்திருக்கின்றது. இலங்கையிலே 1977 இல் தான் கடைசியாக பொதுத் தேர்தல் நடைபெற்றது என்பதை, பெரும்பாலோர் மறந்து விட்டனர். நொவம்பர் 1988 க்கும் ஜனவரி 1989 க்கும் இடையில் நடைபெற்ற தேர்தலுக்குத் தூண்டுகோலாக அமைந்தது, கிழக்கு மாகாணத்தில் அமைதிப்படை வெற்றிகரமாக தேர்தலை நடாத்தியமையே. எனவே, முழுப்பாராட்டும் எமது அமைதிப்படைக்கே உரியதாகும். எமது படை வெறுமனே அமைதிப்படையாக மட்டுமல்லாது, அரசியல் பங்கினையும் ஆற்றியுள்ளது இத்துடன் நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்கும், அமைதிப்படையே பெருமளவில் உதவிற்று.

நிவாரணம், புனருத்தாரணம் போன்ற பணிகளை விட தமிழருக்குத் தேவைப்படும் அரசியல் சூழ் நிலையையும், அமைதிப்படை உருவாக்கியுள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன் படுத்துவது, தமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவது, தமிழரைப் பொறுத்தது. ''அமைதிப்படை ஓர் அரசியல் தரகர் அல்ல''

(இச் சொற்பொழிவு யூலை 1989க்கு முன்னர் ஆற்றப் பட்டது.) □

# உலக விளையாட்டரங்கம் - 1989

ஜி. எஸ். சவரிமுத்து

ஒவ்வொரு ஆண்டைப் போலவும் சென்ற ஆண்டிலும் விளையாட்டுத் துறையைப் பொறுத்தமட்டில் எதிர்பாராத முடிவுகள், சாதனைகள், சோதனைகள் ……… என்ற விதமாக/ பற்பல விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆண்டின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை விளையாட்டுத் துறையின் முக்கியமான சம்பவங்கள், சாதனைகள் எவ்வாறு நடந்தேறின?

மார்ச், ஏப்ரில் மாதங்களில் உலகக்கிண்ண உதைபந்தாட்டங்களுக்கு அடுத்ததாகப் பிரபலம் வாய்ந்ததெனக் கருதப்படும் F. A கிண்ணப்போட்டிகள் பிரிட்டனில் நடைபெற்றன. இப்போட்டித் தொடரின் போது லிவர்பூல், எவட்டன் (Everton) என்ற இரு அணிகளிடையே நடைபெற்ற போட்டியின்போது ஏற்பட்ட, பார்வையாளருக்கிடையேயான மோதலில் 95 பேர் கொல்லப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து, இங்கிலாந்தின் கிரிக்கட்அணி அவுஸ்திரேலியாவின் அணியுடன் 5 டெஸ்டுகள்கொண்ட தொடர் போட்டியொன்றில் ஈடுபட்டது. அவுஸ்திரேலிய ஆட்டக்காரராகிய ரெறி ஆல்மன் இன் அபாரபந்து வீச்சினால் இங்கிலாந்து சோககீதம் இசைக்கவேண்டியதாயிற்று. 4-0 என்ற ரீதியில் அவுஸ்திரேலியா தொடரை வென்றது. அதே சமயத்தில் இங்கிலாந்தின் சர்ச்சைக்குரிய ஆட்டக்காரர் மைக் கற்றிங் (Mike Gatting) தலைமையில், இங்கிலாந்தின் முன்னணி ஆட்டக்காரர் சிலர் தென்னாபிரிக்கா பயணமானார்கள். இங்லாந்து கிரிக்கட் அணிக்கு மற்றொரு சாவு ஏற்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் அணி இந்தியாவுடன் இன்னொரு டெஸ்ட் தொடரில் 3-0 என்ற முறையில் வெற்றிபெற்றது. மேற்கு இந்திய அணி இந்தியாவுக்கு எதிராக விரைவாகவும், இலகுவாகவும் ஓட்டங்களைக் குவித்தது. அதேவேளை சஞ்சே மஞ்ரேக்கர் என்ற இளம் இந்திய வீரரின் திறமையும் உலகுக்கு வெளிப்பட்டது

பிரான்சில் நடைபெற்ற பிரெஞ்ச்ஒப்பின் (French open) ரென்னிஸ் சர்வதேசப் போட்டி, எதிர்பாராத மாறுதல்களையேற்படுத்தி பலபுதிய முகங்களை அறிமுகம் செய்தது மைக்கேல் சாங் (Michacl Chang) என்ற 17 வயது அமெரிக்க ஆட்டக்காரர் பெக்கர், எடபேக், லென்டில், போன்ற பல ரென்னிஸ் சம்பியன்களைத் தோற்கடித்து, சர்வதேச ரென்னிஸ் போட்டித்தொடரொன்றை வென்ற மிக இளைய வீரர் என்ற பட்டத்தைப் பெற்றார். இதே போன்று பெண்கள் பிரிவிலும் கரஞ்சா சஞ்சாஸ் (Harancha Sanchaz) என்ற ஸ்பெயின் நாட்டு வீராங்கனை, ஸ்டெபி கிராபைத் தோற்கடித்தார்.

விம்பிள்டன் போட்டிகள் தொடர்ந்தது. ஸ்டெபி கிராப் பொரிஸ் பெக்கர் ஆகிய மேற்கு ஜேர்மன் ஆட்டக்காரர்கள் முறையே பெண்கள், ஆண்கள் பிரிவுகளில் சம்பியன் பட்டங்களைப் பெற்று, விம்பிள்டனில் இருந்த அமெரிக்க ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

பார்சலோனாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத்துக்கான மெய்வல்லுனர் போட்டிகளில் அமெரிக்கா, கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் முறையே ஆண்கள், பெண்கள் பிரிவில் உலகக்கிண்ணத்தைச் சுவீகரித்தன. றெஜர் கிங்டம் என்ற வீரர் 110 மீற்றர் தடைதாண்டும் போட்டியில் 12.88 செக்கன்களில் தாண்டி, பிரமிக்கத்தக்க உலக சாதனையொன்றை நிலைநாட்டினார்.

உலக குத்துச்சண்டைச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட உலக குத்துச்சண்டைப் போட்டிகளில் மைக்ரைசன் என்ற வீரர் மீண்டும் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட புறூனே என்ற வீரர் படுகாயத்திற்கும் பயங்கரத் தோல்விக்கும் உள்ளானார்.

தென்கிழக்காசிய விளையாட்டுப்போட்டிகள் பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமபாத்தில் ஆரம்பமாகின. இந்திய வீரர்களின் சாதனைகள் அபாரமாக இருந்தபோதிலும், இலங்கையின் நீச்சல் வீரன் யூலியன் போலிங் (Julian Bolling) இன் சாதனைகள் உலக அரங்சத்துக்கு வெளிப்பட்டன. ஸியா உல் ஹக்கின் ஆட்சியின் போது மறைந்திருந்த பாகிஸ்தானியப் பெண்களின் திறமைகளை, விளையாட்டுத்துறை ஏற்றுக்கொண்டது. (ஸியாவின் ஆட்சியில், பாகிஸ்தானியப்பெண்கள் சர்வதேசப் போட்டிகளில் இருந்து தடை செய்யப்பட்டிருந்தனர்)

நேரு நூற்றாண்டை ஒட்டி பாரதத்தில் நடைபெற்ற போட்டிகள், இந்த சாப்தத்தில் முக்கிய இடத்தையெடுக்கின்றன. டெல்லியில் நடைபெற்ற போட்டிகளில், இத்தசாப்தத்தின் சிறந்த ஓட்ட வீரர் எனக் கணிக்கப்பட்டுள்ள கார் லூயிசுக்கு ஏற்பட்ட தோல்வியும், ஆன்ரேஸ் பேஜருக்கு கிடைத்த வெற்றியும் குறிப்பிடத்தக்கன. பற்றிக் தம்பதிகளும் தடைதாண்டும் போட்டிகளில் தத்தம் பிரிவுகளில் திறமைகாட்டினார்.

இதனைத் தொடர்ந்து சார்ஜாவில் நடைபெற்ற 3 நாடுகள் கிரிக்கட் போட்டிகளில், பாகிஸ்தான் சம்பியனானது. நேரு நினைவாக நடைபெற்ற எம்.ஆர். எவ் (M.R.F) கிரிக்கட்தொடர் போட்டிகள் ஆரம்பித்தன. பிரமிக்கத்தக்க முறையில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. அசைக்கமுடியாத நிலையில் இருந்த மேற்கு இந்திய அணியினர், தொடர்ந்து வந்த இரு தோல்விகளால் நிலைதடுமாறினர்.

டெல்லியிலே நடைபெற்ற 8ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 35 நாடுகள் பங்கெடுத்தன. இந்திய வீராங்கனை பி.டி. உஷா போட்டிகளின் சிறந்த வீராங்கனையாகத் தெரியபப்பட்டார்.

பாகிஸ்தான் – இந்திய டெஸ்ட் தொடர்கள் ஆரம்பித்தன. டெஸ்ட் போட்டிகள் அனைத்தும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தாலும், ஒருநாள் போட்டிகளில் இந்தியாவுக்குத் தோல்விகள் ஏற்பட்டன. இத்தோல்விகள் இந்தியாவின் புதிய அணித்தலைவர் ஸ்ரீகாந்துக்கு பேரடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது (1990 ஆம் ஆண்டுகளின் கவாஸ்கராக இருக்கப்போகும் 16 வயதே நிரம்பிய தெண்டுல்கர் என்ற வீரர், இந்திய அணியில் அறிமுகப்படுத்தப்பட்டமையும், அவர் இப்போட்டிகளில் ஓட்டங்களைக் குவித்தமையும் இத்தொடரின் முக்கியமான அம்சங்களாகும்.)

அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்த இலங்கை அணி, தான் ஆடிய 2 டெஸ்ட்போட்டிகளில் ஒன்றில் தோல்வி காணவேண்டியதாயிற்று. 8 வருட அனுபவம் கொண்ட அணியாக இருந்தும் ''அனுபவம் போதாது'' என்ற பல்லவியைப்பாடி வரும் இலங்கை அணி, 1990 களிலும் இதனைத் தொடருமா?!

1989 ஆம் ஆண்டு முடிந்துள்ள அதேவேளையில், புதியதொரு சகாப்தமே தொடங்கியுள்ளது. கடந்த ஆண்டில் இருந்தது போல போதைப் பொருள் பிரச்சினை, அரசியல் தலையீடு, கலகங்கள், நடுநிலைமை தவறிய மத்தியஸ்தம் போன்ற பிரச்சினைகள், புதியதொரு தசாப்தத்திலும் தலைவிரித்தாடுமா என்ற வினாக்குறி, பலகோடி விளையாட்டு ரசிகர்களின் முன் எழுந்து நிற்கின்றன. இத்தகைய பிரச்சினைகள் இல்லாதபோது தான், ''விளையாட்டு'' என்பதற்குத் தகுந்த அர்த்தம் கிடைக்கும் என்பது, இந்தப் பலகோடி ரசிகர்களின் கருத்தாகும். □

# நோய் ஒழிப்புப் பணியில் பரம்பரை அலகுகளை நெறிப்படுத்தும் புதிய முறை

மேனாட்டு மருத்துவ முறை இன்று மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. நவீன தொழில்நுட்ப முறைகளின் துணையோடு அதிசயிக்கத்தக்க பல புதிய புதிய சாதனைகளை நிகழ்த்துகிறது. கத்தியின்றி, இரத்தமின்றி லேசர் கதிர்கள் மூலம் சத்திர சிகிச்சை செய்வது போன்ற பல்வேறு உதாரணங்களைக் கூறலாம்.

'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தியது' நாமென, பழம் பெருமைபேசி, மகிழ்ந்து, திருப்தியடைந்து விடுகின்றனர் எம்மில் பலர். ஆனால் மேனாட்டவர்கள் தினமும் புதிய புதிய கண்டுபிடிப்புகளைச்செய்து கொண்டே இருக்கிறார்கள்.

உயிரினங்களின் மிக நுண்ணியதும், முக்கியமானதும், ஒவ்வொரு உயிரினத்திற்கும் பிரத்தியேகமானதும், மாற்ற முடியாது என இதுவரை நம்பப்பட்டதுமான பரம்பரை அலகுகளையே நெறிப்படுத்தக் கூடிய அதிநவீன தொழில் நுட்பங்களைக் கண்டுபிடித்து விட்டார்கள். 'பரம்பரை அலகுகளை நெறிப்படுத்தல்' என்ற இந்தப் புதிய முறையை Genetic Engineering என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். இந்தப் புதிய முறையை மேனாட்டு வைத்தியத்துறை பல்வேறு வழிகளில் பயன்படுத்தி வருகிறது.

எல்லா உயிரினங்களின் கலங்களினுள்ளும் D. N. A. என்ற மூலக்கூறு இருக்கிறது. இதுவே உயிரினங்களின் அடிப்படை: அக் கலங்களுக்கு உயிரைக் கொடுப்பவை; அத்துடன் குறிப்பிட்ட ஒவ்வொரு உயிரினத்தினது எல்லா இயல்புகளையும் நிர்ணயிக்கும் பரம்பரை அலகுகள் (gene) அமைந்திருப்பதும் இவற்றில்தான். இவற்றிற்குத் தம்மைத்தாமே இரட்டித்துக் கொள்ளக் கூடிய திறமையும், சில புரதங்களின் உற்பத்தியில் ஈடுபடும் தன்மையும் உண்டு.

இந்த இரண்டு தன்மைகளையும் பயன்படுத்தி பல புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது, இன்றைய மருத்துவத் துறை.

சில நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து தயாரிப்புகளில், 'பரம்பரை அலகுகளை நெறிப்படுத்'தும் தொழில் நுட்பம் மிகவும் சீரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

டொக்ரர் எம். கே. முருகானந்தன்

இது எப்படிச் செய்யப்படுகிறது என்பதைக் கூறுமுன், இதுகாலவரை தடுப்பு மருந்துகள் எவ்வாறு தயாரிக்கப்பட்டன என அறிவது அவசியம். தடுப்பு மருந்துகளில் நோயை ஏற்படுத்தும் கிருமிகளை அல்லது அக்கிருமிகள் நோயை ஏற்படுத்துவதற்காகச் சுரக்கும் நச்சுப் பொருட்களை (Toxins), மூலப் பொருட்களாகப் பயன்படுத்துவார்கள். அந்தக் கிருமிகளையோ, நச்சுப் பொருட்களையோ அப்படியே பயன்படுத்த முடியாது. ஏனெனில் அவை நோயையே ஏற்படுத்தலாம்.

எனவே, கொல்லப்பட்ட கிருமிகளையோ, அல்லது நோயை ஏற்படுத்த முடியாதவாறு செயலிழக்கச் செய்யப்பட்ட உயிர்க் கிருமிகளையோ, தடுப்பு மருந்துகளாகப் பயன்படுத்துவார்கள். இதற்கு உதாரணமாக சயரோகத்திற்கு எதிரான பீ. ஸீ ஜி. (B. C G.) தடுப்பு மருந்து, போலியோவிற்கு எதிரான சேபின் (Sabin) தடுப்பு மருந்து, சின்னமுத்து நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இதேபோல் கிருமிகளால் சுரக்கும் நச்சுப்பொருட்களையும் நோயை ஏற்படுத்தாதவாறு செயலிழக்கச் செய்து (Toxoids) பயன்படுத்துவார்கள். இதற்கு உதாரணமாக தொண்டைக்கரப்பான், ஏற்புவலி நோய் ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு மருந்துகளைக் குறிப்பிடலாம்.

இம் மருந்துகளை மனித உடலில் ஏற்றுவதன்மூலம், மனித உடலின் நிர்ப்பீடனத் தொகுதி செயற்பட்டு, அந்நோய்க்கு எதிரான பிறபொருள் எதிரிகளை (Antibodies) உற்பத்தி செய்யும். இப் பிறபொருள் எதிரிகளே, நோய்க்கிருமிகள் தொற்றினாலும் அவற்றுடன் போராடி நோய் ஏற்படாமல் தடுக்கின்றன.

புதிய தடுப்பு மருந்துகளின் உற்பத்தியில் பரம்பரை அலகுகளை வழிநடத்தும் செயல்முறை எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என இனிப் பார்க்கலாம்.

ஹெப்பரைரிஸ் பீ (Hepatitis B) என்பது வைரஸ் கிருமியால் பரவும் ஒருவகை ஆபத்தான செங்கண்மாரி நோயாகும். எயிட்ஸ் போலவே இந் நோயும் இரத்தத்தினால் பரவும் ஒரு நோயாகும். எனவே இக்கிருமியை மனித இரத்தத்திலிருந்து பிரித்தெடுத்து தடுப்பு மருந்து தயாரித்தால், அது மனித இரத்தத்தில் இருக்கக்கூடிய எயிட்ஸ் போன்ற ஏனைய கிருமிகளால் மாசடையக் கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது.

எனவேதான் SK & F என்ற மருந்துக்கொம்பனி இந் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தைப் புதிய முறையில் தயாரித்துள்ளது. இந்த தடுப்பு மருந்தில் ஹெப்பரைரிஸ் பீ வைரஸ் உபயோகிக்கப்படுவதில்லை, ஆனால் மதுவக் (yeast) கலம்தான் உபயோகிக்கப்படுகிறது.

## மருத்துவத்தில் இன்று

ஹெப்பரைரிஸ் பீ வைரசில் உள்ள HBs Ag என்ற பரம்பரை அலகைப் பிரித்தெடுத்து, ஈ கோலம் (E Coli) க்றீரியாவின் உதவியுடன் மதுவக் கலத்தின் DNAயுடன் இணைக்கிறார்கள். இதனால், ஹெப்பரைரிஸ் பீ வைரசிற்கே சிறப்பம்சமான, அதன் வெளியுறையில் இருக்கும் ஒருவகைப் புரதம், இப்பொழுது இந்தப் புதிய மதுவக் கலத்தில் உருவாகிறது. இந்த மதுவம்தான் ஹெப்பரைரிஸ் பீ தடுப்பு மருந்தில் உபயோகிக்கப்படுகிறது.

மனித இரத்தத்தினால் மாசு அடையாமல் இருப்பது இந்தப் புதிய முறையின் சிறப்பம்சமாகும். வேண்டிய அளவிற்கு தடையேதுமின்றி உற்பத்தி செய்ய முடிவதும், மிகக் குறைந்த அளவு தயாரிப்புச் செலவும் ஏனைய முக்கிய அனுகூலங்களாகும்.

இதேபோல் ஒன்கோஜன் (Oncogen) என்ற மருந்துக் கொம்பனி எயிட்ஸ் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து தயாரிப்பில், இப்புதிய நெறிமுறையைப் பயன்படுத்துகிறது. இங்கு வக்ஸீனியா (Vaccinia) என்ற, நோயைப் பரப்பாத ஆபத்தற்ற வைரசினுள், எயிட்ஸ் நோயை ஏற்படுத்தும் HIV வைரசின் சில பரம்பரை அலகுகள், நெறிப்படுத்தப்படுகின்றன. இதனால் HIV (எயிட்ஸ்) வைரசிற்கே உரியதான சில கிளைகோ புரதங்கள்—gp 160, gp 120, gp 41—வக்ஸீனியா வைரசால் உற்பத்தியாக்கப்படுகின்றன. இவையே தடுப்பு மருந்தாக உபயோகப்படுத்தப்படவிருக்கிறது. ஆயினும் இத் தடுப்பு மருந்து இன்னமும் மனிதரில் பரீட்சிக்கப்பட்டுப் பாவனைக்கு விடப்படவில்லை.

இதேபோல் மலேரியா நோய்க்கு எதிரான தடுப்பு மருந்துத் தயாரிப்பிலும் 'பரம்பரை அலகுகளை நெறிப்படுத்தும்' நடைமுறையே பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் தடுப்பு மருந்திற்குத் தேவையான மலேரியா ஒட்டுண்ணிகளை (asexual and Sexual Led cell stager) செங்குருதிக் கலங்களின் இலிங்கமுறை—இலிங்கமில்முறைகளின் படிகள்) வழமையான முறைகளில் மிகக் குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்யலாம். இது தடுப்பு மருந்தை போதிய அளவிற்கு உற்பத்தி செய்வதற்குத் தடைக்கல்லாக அமைகிறது. எனவே இவற்றை, பரம்பரை அலகுகளை நெறிப்படுத்தல் முறை மூலம் அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இது வெற்றி பெறும் பட்சத்தில் மலேரியாவிற்கு எதிரான தடுப்பு மருந்து தயாராகி விடும்.

இதைத் தவிர சில மருந்துத் தயாரிப்புகளிலும் இப்புதிய முறை உபயோகிக்கப்பட்டுள்ளது. இம்முறை மூலம் தயாரிக்கப்பட்ட 'மனித இன்சுலின்' ஏற்கனவே விற்பனைக்கு வந்துள்ளது. இருதய நோய்க்கு உதவக்கூடிய பிளஸ்மினோஜின் ஊக்குவிப்பி (Plasminogen activator) இரத்த, ஈரல், புற்றுநோய்களுக்கு எதிரான இன்ரபெரோன் Interferon), உடல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் மனித வளர்ச்சி ஓமோன்கள் (Human growth hormone) ஆகியவையும் இப்பொழுது பரம்பரை அலகுகளை நெறிப்படுத்தல் முறை மூலம் தயாரிக்கப்படுகின்றன.

எதிர்காலத்தில் இன்னும் பல ஆச்சரியங்கள் எமக்குக் காத்திருக்கலாம்.

சில பரம்பரை நோய்களைக் குணப்படுத்தல் (Somatic Cell gene therapy) பரம்பரை நோய்களைப் பிறக்கப் போகும் குழந்தைக்கு ஏற்படாமல் தடுத்தல் (Germ - line Cell gene therapy), சாதாரண மனிதனது சில இயல்புகளை (— உதா. உயரம்) ஊக்குவித்தல் (Enhancement genetic engineering) போன்றவை மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் காலம் அதிக தொலைவில் இல்லை.

எனவே பரம்பரை அலகுகளை நெறிப்படுத்தும் இப் புதிய தொழில்நுட்பம், மனித குலத்தினது எதிர்காலத்தையே மாற்றிவிடக் கூடிய வன்மை பொருந்தியதாக வளரக் கூடும் □

# அறிவியலிற்கான நோபல் பரிசுகள் - 1989

## பௌதிகம்

ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நோமன் ராம்சே (Norman Ramsey) பரிசின் அரைவாசித் தொகையைப் பெறுகிறார். 'செப்பரேட்டர் — ஒசிலேற்றிங் — பிக்ஸ்ட் டெக்னிக்' (Seperated acillating fixed technique) என்ற இவரது முறை அணுக்கடிகாரங்களில் உபயோகிக்கப்படுகிறது. அணுக்கடிகாரங்களில் சீசியம் (Cs) அணுவின் கரு ஓர் காந்தப் பாயத்தில் சுழலுவதால் அதன் மூலம் நேரம் மிகவும் அண்ணளவாக அளக்கப்படுகிறது. ஒரு செக்கனின் 919263.70 வரை அளவிடக்கூடியதாக இவை உள்ளன. கடல்பயணத்திலும் (naviation), மற்றும் கண்டங்களின்நகர்வு (Continentaldrift) வானசாஸ்திர இணைப்பு அளவியல்களிலும் (Astronomical Co-ordination measurments) நேரத்தை புவியீர்ப்பு சக்தி குறைக்கும் பெறுமானத்தை தக் கணக்கிடுவதிலும் இவரது பங்கு கணிசமானதாகும். இது 1000 வருடங்கட்கு ஒரு செக்கன் ஆகும். பரிசின் மறு

சு. மகேந்திரன்

பகுதி இரு பௌதிக விஞ்ஞானிகளான கான்ஸ்டி மெல்ட் (Haws De h melt) என்பவருக்கும் வோல்டகாங் — போல் (Woltgang - Paul) என்பவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இலத்திரன்களை அணுவில் இருந்து பிரித்து தனியே எடுப்பதற்கான முறைகளை கண்டுள்ளார்கள். இதில் கான்ஸ் மின்காந்தத் தொட்டில் ஒன்றை உருவாக்கி வெற்றிடத்தில், பிரிக்கப்பட்ட இலத்திரன்களை மாதக் கணக்கில் வைத்துள்ளார். போல் பிரித்து எடுக்கப்பட்ட இலத்திரனுக்கு லாசர் கதிர் மூலம் ஒளியூட்டி அது ஒரு நீல நட்சத்திரம் போல் ஒளி விட்டதை காண்பித்து பரிசோதனைகளை நடத்தி உள்ளார்.

## இரசாயனம்

இதுகாலவரை உயிரியல் மாணவர்கள் உயிர்க்கலங்களில் உள்ள D. N. A, R.N.A என்பவை வெவ்வேறு தொழிற்பாட்டை உடையவை என்று பிரித்துப் படித்துள்ளனர். இம்முறை பரிசு பெறும் இரசாயன ஆய்வாளர்களான சிட்னி ஒல்றமன் (Sidney Altman), தோமஸ் செக் என்பவர்களின் ஆராய்ச்சி முடிவுகள் பல புதிய தகவல்களை தந்துள்ளன. இதுகாலவரை DNA மட்டுமே பிறப்புரிமையை நிர்ணயிக்கும் காரணி எனக் கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் இவர்கள் R.N.A யும் பிறப்புரிமையை நிர்ணயிக்கும் காரணி என நிறுவியுள்ளனர். இது விலங்குகள், தாவரங்கள் பக்டீரியா என்னும் மூன்றுக்கும் பொருந்துவனவாக உள்ளது எனப் பரிசோதனைகள் காட்டியுள்ளன. மேலும் முன்பு புரொட்டீன் வகைகளே என்சைம் (Enzymes) கொள்ளப்பட்டு வந்தன. இப்போது ஜெனிட்டிக்ஸ் (genetic) தகவல்களை தரவும், அத்துடன் ஊக்கியாகவும் R. N. A விளங்கும் என நிறுவப்பட்டுள்ளதால் பெரிய மாறுதல்கள் புத்தகங்களில் செய்யப்படவேண்டிஏற்படும் என்கின்றனர் இவ் ஆய்வாளர்கள். மேலும் R.N.A உயிரின் உற்பத்தியில் மிக முக்கியமான மூலக்கூறாக கருதப்பட தொடங்கி விடும் என்கின்றனர் இது வரை D.N.A மட்டுமே இவ்வகையானது எனக் கொள்ளப்பட்டிருந்தது.

## மருத்துவமும் உடற்கூற்றியலும்

J. மைக்கல் பிஷப் (Micheal Bishop), ஹெரொல்ட் L. E. வாமஸ் (Herold E. Varmos)

(11ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையின் மூத்த இடதுசாரித் தலைவர்களில் ஒருவரும், இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான நா. சண்முகதாசன் Political Memoirs of An Unrepentant Communist (மனம் வருந்தாத ஒரு கொம்யூனிஸ்டின் அரசியல் நினைவுகள்) என்ற நூலினை அண்மையில் வெளியிட்டுள்ளார். அதன் 11ஆம் அத்தியாயத்தின் ஒரு பகுதியினை, இங்கு தருகிறோம். உபதலைப்புகள் எம்மால் இடப்பட்டவை

— ஆர்.

# தொழிற்சங்க சீர்திருத்தவாதம்

**நா. சண்முகதாசன்**

சீனக் கலாசாரப் புரட்சியின் படிப்பினைகளிலிருந்தும் வந்ததான எமது கட்சியின் உயர்ந்த மார்க்சிச லெனினிச உணர்வின் பயனாக, நாம் இடதுசாரி இயக்கத்தில் நிலவத் தொடங்கிய தொழிற்சங்கங்களில் செயற்படும் சீர்திருத்தவாத முறையின் சரி பிழை பற்றிப், பாரதூரமாகச் சிந்திக்கத் தொடங்கினோம். இது 196? ஒகஸ்ட் 5ஆம் திகதி புதிய நகர மண்டபத்தில் (கொழும்பு) நடைபெற்ற இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் விசேட மாநாடொன்றில் ஆராயப்பட்டது. அச் சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி என்ற முறையில் நான் இந்த மாநாட்டிற்சமர்ப்பித்த அறிக்கையில், பிரேரணைகளை முன்வைத்தேன். இப்பிரேரணைகள் மூலம் நான் தொழிற்சங்க இயக்கத்தை பொருளாதார வாதம், சீர்திருத்த வாதம், அரசாங்கமும் முதலாளிகளும் திரிபுவாத ட்ரொட்ஸ்கியவாதத் தொழிற்சங்கத் தலைவர்களும் உழைக்கும் வர்க்கத்தைத் தள்ளிவிட நினைக்கும் தொழிற்சங்க அரசியல், ஆகிய சகதிகளுள் புதைந்து விடாமற் காப்பாற்ற நினைத்தேன்.

## பொருளாதாரக் கோரிக்கைக்குப் போரிடுவது

உழைக்கும் வர்க்கத்தின் அடிப்படை உணர்வுகளுள் ஒன்று, தமது பொருளாதார கோரிக்கைகளுக்காகப் போரிடுவதாகும். இது முதலாளித்துவ அமைப்புக்குள்ளேயே தானாகத் தலை தூக்கும் ஒரு விஷயமாகும். இது தமது உழைப்புச் சக்தியை ஒரு பண்டமாக விற்க வேண்டி ஏற்படும் நிலைமையில், தமது உழைப்புச் சக்தியின் விலை குறித்து முதலாளிகளுடன் தொழிலாளர் பேரம்பேச வேண்டிய தேவையிலிருந்து ஏற்படுகிறது. ஆகவே கொம்யூனிஸ்டுகள் தொழிலாளரின் பொருளாதாரப் போராட்டங்களினின்றும் விலகித் தூர நிற்க முடியாது. இந்தப் போராட்டங்களிற்தான் ஒரு தொழிலாளியின் உடனடி நலனே தங்கியுள்ளது.

ஆனால் அதே நேரம், எல்லாத் தொழிற்சங்க வேலைகளிலும் சீர்திருத்தவாதம் என்ற அம்சம் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடும் போது நாம், மார்க்ஸ் கூறியது போல, விளைவுகளை எதிர்த்துப் போராடுகிறோமேயொழிய காரணங்களை எதிர்த்துப் போராடவில்லை. இந்தப் போராட்டங்கள் அனைத்தும் இருக்கின்ற முதலாளித்துவக் கட்டுக் கோப்புக்குள் உள்ள, தொழிலாளியின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான முயற்சிகளேயாம். நாம் பொருளாதாரப் போராட்டங்களில் மட்டுமே ஈடுபடுவோமேயானால், எமது செயற்பாடுகள் எளிதில் முற்று முழுதான சீர்திருத்த வாதமாகக் கெட்டழிவதுடன், தொழிலாளருக்குச் சிறிய சலுகைகளை மட்டுமே பெற்றுத் தரக்கூடிய இப்போதிருக்கின்ற முதலாளித்துவ அமைப்பைப், பாதுகாக்க உதவுவதாகவும் அமையும்.

## புத்திசாலிகளான முதலாளிகள்

தொழிற்சங்கங்கள் உழைக்கும் வர்க்கத்தின் போராட்ட உறுப்புகளாகவே தோற்றம் பெற்றன. ஆனால் காலப்போக்கில், முதலாளி வர்க்கம் தொழிற்சங்க அமைப்பை முதலாளித்துவ அமைப்பின் ஒரு பகுதியாக்குவதும், தொழிற்சங்கத்தின் அதிகார முதலாளித்துவத் தலைமையை விலைக்கு வாங்கி, அத்தலைமையின் நலன்களை முதலாளித்துவ அமைப்பின் வாழ்வுடன் இணைப்பதும் தனக்கு நன்மையே தரும் என்று உணர்ந்து கொண்டது.

இந்த எண்ணத்தை மனதிற் கொண்டு, புத்திசாலிகளான முதலாளிகள் தொழிலாளர் ஸ்தாபனம் அமைக்கவும் வேலை நிறுத்தம் செய்யவும் தொழிலாளரை அனுமதித்தது மாத்திரமல்ல அதற்கு மேலாகவும் சென்றனர். தொழிற்துறை நீதிமன்றங்கள், தொழிற்துறை மன்றங்கள், சம்பளச்சபைகள் போன்ற பல மத்தியஸ்த முறைகளை அவர்கள் புகுத்தினார்கள். இதனால் தொழிலாளர் சட்டத்தரணிகளிலும், திறமையான தொழிற்சங்கத் தலைவர்களிலும் நம்பிக்கை வைத்தார்கள். இவர்கள் இந்த நிறுவனங்களில் தொழிலாளரைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள். தொழிலாளர் தமது கூட்டாகப் போரிடும் சக்தியிலும் பார்க்க, இந்த முறைகளில் அதிக நம்பிக்கைவைக்கும் நிலைமை ஏற்பட்டது.

## தொழிற்சங்க அதிகாரி

இந்த முறையினால் தொழிற்சங்க அதிகாரி தோன்றுகின்றார். இவருக்கு தொழிலாளர் நிதிகளிலிருந்து பெரிய சம்பளம் கொடுக்கப்படுகிறது. இவருக்கு இந்தத் தொழிற்சங்க வேலை ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய நலனாகின்றது. இவர் பல ஊழியர்களைக் கொண்ட பெரிய அலுவலகங்களிலிருந்து செயற்படுகின்றார். சட்டத்தரணிகளைக் கூட வைத்திருக்கின்றார். சில சமயங்களில் இந்தத் தொழிற்சங்க அதிகாரி அவருக்கு எதிரேயிருக்கும் முதலாளியிலும் பார்க்க, நிறைவசதி கூடியவராக இருக்கின்றார். இத்தகைய ஆட்கள் முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதில் நாட்டங்கொண்டவர்கள். ஏனெனில் அவருடைய வாழ்வுக் கதியும் அதனுடன் இணைந்துள்ளது. இவருக்குப் புரட்சியில் அக்கறை இருக்க முடியாது. இதனாற்தான் பல நாடுகளில் கொம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்கள் முதலில் நவீன திரிபுவாத நிலைப்பாட்டை எடுத்தவர்கள் ஆகினார்கள்.

இத்தகைய தொழிற்சங்கச் சீர்திருத்தவாதம் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் மாத்திரமல்ல இலங்கை போன்ற நாடுகளிலும் ஏற்பட்டது. இத்தகைய சீர்திருத்தவாதத் தொழிற்சங்க வேலையிலும், தொழிலாளர்போராட்டத்தை வெறும் பொருளாதாரப் போராட்டமாகக் கருதுவதனாலும், தொழிலாளர்கள் நியாயமான முறையில் வெறுப்படைந்தனர். சில நேரங்களில் சகல தொழிற்சங்க வேலையும் பிற்போக்கானது, சீர்திருத்தவாதமானது, ஆகவே தொழிற்சங்க வேலையைச் செய்யாது விட வேண்டுமென்று கருதினார்கள்.

## மிகை மதிப்பீடு தவறானது

நாம் தொழிற்சங்கப் போராட்டங்களின் முக்கியத்துவத்தைக் கூடுதலாக மதிப்பிடக்கூடாது அவற்றுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. முதலாளிக்கெதிரான பொருளாதாரப் போராட்டங்களில் தொழிலாளருக்கு அரசியல் ரீதியில் போதனையளிப்பது, எமது கடமையாகும். இது வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவமாகும். இதிலிருந்து இந்தப் பொருளாதாரப் போராட்டங்களை ஏதோ ஒரு கட்டத்தில், தொழிலாளர்கள் அபரிமிதப் பெறுமதியை உருவாக்க முதலாளிகளுக்குத் தமது உழைப்புச்சக்தியை விற்க நிர்ப்பந்திக்கும் அந்தச் சுரண்டல் அமைப்பு முறையை ஒழிப்பதற்கான, அரசியற் போராட்டமாக மாற்றும் அவசியத்தைத், தொழிலாளருக்குப் போதிக்க வேண்டும்.

மார்க்ஸ் தமது பெறுமதி, விலை, லாபம் என்ற நூலில் இதனை மிகவும் அழகாகக் கூறியுள்ளார், இந்தச் சம்பள அமைப்பு முறையில் அடங்கியுள்ள பொதுவான அடிமைத்தனத்தைத் தவிர, தொழிலாளிவர்க்கம் இந்த அன்றாடப் போராட்டங்களின் இறுதி முடிவுகள் பற்றி அவ்வளவுக்குத் தலையை உடைத்துக்கொள்ளக்கூடாது, "அவர்கள் விளைவுகளுடன்தான் போராடுகின்றார்கள், இந் விளைவுகளுக்கான காரணங்களுடன் அல்ல என்பதையும், அவர்கள் கீழ்நோக்கிச் செல்வதைத் தடுக்கிறார்களே தவிர திசைப்போக்கை மாற்றவில்லை என்பதையும், அவர்கள் தணிப்பு மருந்துகளைப் போடுகிறார்களே தவிர நோயைத் தீர்க்கவில்லை என்பதையும் ஒரு போதும் மறந்து விடக் கூடாது."

## அரசியலை ஆணையில் வைத்தல்

தொழிலாளர்களின் அரசியல் உணர்வை உயர்த்துவதற்கும் பொருளாதார சித்தாந்தப் போராட்டங்கள் மூலம் அவர்களுடைய வர்க்க உணர்வை ஆழமாக்குவதற்கும் மாத்திரம் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம் என்ற நோக்கம் எமது உள்ளங்களில் தெளிவாக இருக்கும் வரை, தொழிலாளர்கள் பொருளாதாரப் போராட்டத்தை அரசியல் போராட்டமாக மாற்றும் அவசியத்தை அதாவது முதலாளித்துவ அமைப்புக்குள் தமது நிலைமையைச் சீராக்குவதற்கான போராட்டத்தை முழுதாக முதலாளித்துவச் சுரண்டலை அழிப்பதற்கான போராட்டமாக மாற்றுவதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்யும் வரை, தொழிற்சங்க நடவடிக்கையில் தமது நேரத்தையும் ஊழியர்களையும் விரயமாக்காமல் இருக்கும் வரை, தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தேவைக்கு மீறிய முக்கியத்துவம் கொடுக்காத வரை, அதாவது எமது நடவடிக்கைகள் அனைத்திலும் அரசியலை ஆணையில் வைக்கும் வரை-நாம் அப்பொழுது புரட்சிகரத் தொழிற்சங்க வேலை செய்பவர்கள் ஆவோம். பொருளாதாரப் போராட்டங்கள் அப்பொழுது உயர்ந்த அரசியல் போராட்டத்துக்கு அத்திவாரத்தை அமைக்கும்.

## எனது மீளாய்வு

கொம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் தொழிற்சங்க சம்மேளனத்திற்குள்ளும் இந்தக் கலந்துரையாடல்கள் நடந்தபோதும், அதைச் சுற்றியமைந்த காலத்தின் போதுந்தான் நான், தொழிற்சங்கத் துறையில் செய்த வேலை குறித்து ஒரு பாரதூரமானதும் விமர்சன ரீதியானதுமான மீளாய்வு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. விளைவு ஐம்பமடித்துக் கொள்ளும்படியாக அமையவில்லை. நான் எனது அரசியல் வாழ்க்கையில் கணிசமானளவு பகுதியை தொழிற்சங்கத் துறையிற் செலவிட்டுள்ளேன். நான் மற்றெந்தத் தொழிற்சங்கத் தலைவரையும் விடத் தனிப்பட்ட முறையில் சம்பளச் சபைகள், கைத்தொழிற் கோடுகள், தொழில் மன்றங்கள் ஆகியன மூலம் பல பொருளாதார வெற்றிகளையும், தொழிலாளரை மீண்டும வேலைக்கு அமரச் செய்வதையும் செய்தேன் என்று கூறினால் மிகையாகாது. இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனமும் இலங்கையின் மிகப் பெரிய தொழிற்சங்க நிலையங்களில் ஒன்றாகியதோடு அது தொழிலாளரால் பெரிதும் மதிக்கப்பட்டும், முதலாளிகளால் பெரிதும் அஞ்சப்பட்டும் வந்தது. இது தொழிலாளர் மத்தியில் புரட்சிகர உணர்வை வளர்க்க உதவி செய்ததா, அல்லது இது சீர்திருத்த வாதத்திற்கே இட்டுச் சென்றதா என்று என்னையே நான் கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன் எந்த ஒரு பகுதித் தொழிலாளரதும் பொருளாதார மட்டத்தை நாம் உயர்த்தும் போதும், அந்த வசதி பெற்ற தொழிலாளர் புரட்சிகர அரசியலில் ஈடாடுவதை அல்லது சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களின் பக்கம் போவதை நான் பலதடவை பார்த்திருக்கிறேன். ஒரு தெளிவான புரட்சிகரத் தொலைநோக்கின்றி நான் தொழிற்சங்க வேலை செய்துவந்துள்ளேன் எனத் தெளிவாகத் தெரிகிறது.

## எமது தவறு

நாம் தொழிலாளரின் தொழிற்சங்கப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கத்தான் வேண்டுமென்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. காரணம், நாம் தொழிலாளரின் அன்றாடப் பொருளாதாரப் போராட்டங்களிலிருந்து எம்மை விலக்கிக் கொள்வது, புரட்சியின் வாகனமாய் உள்ள தொழிலாளரிலிருந்து எம்மைப் பிரித்துக் கொள்வதாகும். இத்தகைய தொழிற்சங்க வேலைகளுக்கு நாம் கொடுத்த அழுத்தத்திலும் அவற்றுக்கு நாம்கொடுத்த முக்கியத்துவத்திலும் அதை நாம் அரசியல் மயப்படுத்தத் தவறியதிலும், அதனைப் புரட்சிகரப் பாதையில் இட்டுச் செல்லாததிலும் தான் தவறிருக்கிறது.

## அடிப்படை முரண்பாடு

தொழிற்சங்க வேலைக்கும் புரட்சிகர வேலைக்கும் இடையில் இன்னொரு அடிப்படை முரண்பாடு இருக்கிறது. அடிப்படையில் சகல தொழிற்சங்க வேலையும் பகிரங்கமானது, சட்டரீதியானது. புரட்சிகர வேலை அனைத்தும் இரகசியமாகச் செய்யப்பட வேண்டும்; மறைத்து வைத்திருக்கப்பட வேண்டும். இலங்கையில் சகல தொழிற்சங்கங்களையும் அரசாங்கத்திடம் பதிவு செய்ய வேண்டும். தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் அனைவரினதும் பெயர்களை நாம் சமர்ப்பிக்க வேண்டும். தொழிற்சங்க வேலை என்றால் நாம் அரசாங்க அதிகாரிகளுடனும் முதலாளிகளுடனும் தொடர்பு கொள்கின்றோம். அவர்கள் எம்மை எப்பொழுதும் சட்டங்கள், விதிகள், உடன்படிக்கைகள் ஆகியவற்றில் சிக்கவைத்துவிடுகின்றார்கள். உதாரணத்துக்கு, கூட்டு ஒப்பந்தம் இருக்கும்பொழுது வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்பது போன்ற விதிகளில், மாட்டி வைத்திருக்கிறார்கள். இது நாடாளுமன்ற அரசியல் வேலைக்கு இசைவானது, புரட்சிகர வேலைக்கு அல்ல. இதிலிருந்து தப்ப வழி என்ன? 'ஒரு கொம்யூனிஸ்ட் ஒரு தொழிற்சங்கச் செயலாளராக அல்ல, மக்களின் மன்றமாக விளங்க வேண்டும்' என்று லெனின் ஒரு தடவை கூறினார். கூடுதலான கொம்யூனிஸ்ட் ஊழியர்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகக்கூடாது; தமது நேரத்தில் கூடுதலான பகுதியைத் தொழிற்சங்க வேலையில் செலவழிக்கக் கூடாது மாறாக தொழிற்சாலை மட்டத்திலுள்ள தலைவர்களை வளர்த்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். கொம்யூனிஸ்ட் தலைவர்கள் அவர்களுக்குப் பின்னாலிருந்து ஆலோசனை வழங்கலாம். மிகவும் முக்கியமானது என்னவென்றால்,

(11ஆம் பக்கம் பார்க்க)

கலைச்சாரல்

## குழந்தை ம. சண்முகலிங்கத்தின்
# பாடசாலை நாடகங்கள்

சபா ஜெயராசா

பாடசாலை நாடகங்கள் கலைத்திட்டத்தின் முழுமையான இயக்கங்களுடன் ஒன்றிணைந்தவை. கற்பித்தலியல், உளவியல், அரங்கியல் என்ற பண்புக்கூறுகளுடன் இயைபு கொண்டு முகிழ்த்தெழுவதே பாடசாலை நாடகங்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையானது பாடசாலை நாடகங்களின் வளர்ச்சிக்குரிய தத்துவம், நடைமுறை என்பவற்றிலே பரந்த தளத்தை ஏற்படுத்திக் கொடுத்தல், சமகால அழகியற் கல்வி வளர்ச்சியிற் குறித்துரைக்கத்தக்க நிகழ்ச்சியாகும். பாடசாலை அரங்கின் வளர்ச்சியில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, குழந்தை ம. சண்முகலிங்கம், கலாநிதி சி. மௌனகுரு ஆகியோரின் பணிகள் ஆக்க வளஞ் செய்யும் விசைகளாகத் தொழிற்படத் தொடங்கியுள்ளன என்பதை, அண்மையில் மேடையேற்றப்பட்ட ஐந்து பாடசாலை நாடகங்கள் மெய்ப்பிக்கின்றன.

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவிகள் ஆச்சி சுட்ட வடை என்ற நாடகத்தை மேடையேற்றினர். இதனை சி. ஜெயசங்கர் நெறியாள்கை செய்தார். அதே கல்லூரி மாணவிகளால் மேடையேற்றப்பட்ட முயலார் முயல்கிறார் என்ற நாடகத்தை க. சிதம்பரநாதன் நெறியாள்கை செய்தார். மேற்கூறிய இரு நாடகங்களும் ஆரம்ப பாடசாலைகளுக்குரிய நாடகங்கள்.

குழந்தை நிலை நாடகங்களிற் சொற்களிலும் அசைவுகளே மேலோங்கி நிற்கும். பாலர் பாடசாலைக்குரிய நாடகங்களில் இந்தப் பண்பே காணப்படும். ஆரம்பப் பாடசாலை நாடகங்களில் சொல்லுக்கும் அசைவுகளுக்குமிடையே மேலும் மேலும் சமநிலை ஏற்படத் தொடங்கும். இந்த 'விருத்தியை' மேற்கூறிய இரு நாடகங்களிலும் காணமுடியும்.

பாடசாலை நாடகங்களில், கருத்தை வெளிப்படுத்தும் முறைமையிற் சிக்கனமும் எளிமையும் சிறப்பிடம் பெறவேண்டியுள்ளன. சொற்கள், அசைவு ஆடை, அணிகலன், இசை என்ற அனைத்துப் பண்புகளிலும் சிக்கனம், எளிமை என்பவை முக்கியமானவை. நாடகப் பிரதியினூடாகவே இந்தச் சிக்கனம் பிறப்பிக்கப்பட முடியும் என்ற தெளிவு, குழந்தை ம. சண்முகலிங்கத்திடம் காணப்படுகின்றது.

ஆரம்பப்பாடசாலை நாடகங்களைத் தாக்கும் எதிர்மறைப் பண்புகள் சில சுட்டிக்காட்டப்படுகின்றன. அவை "வடிவமும் இடைவெளியும்," "வளர்ந்தோர் நேரம்" "அளவுக்கு மீறிய உதவி" என்பனவாகும். நாடகத்தை நெறியாள்கை செய்தோர் மேற்கூறிய எண்ணக் கருக்கள் பற்றிய தெளிவைக் கொண்டிருந்தனர்.

இந்த நாடகங்கள் குழு இயக்கங்களை முதன்மைப்படுத்தும் நுண்புலன் அனுபவங்களை வெளிப்படுத்தின. குழுவின் நுண்புலன் அனுபவங்களை வெளிப்படுத்துவதற்குரிய கருத்து உட்பாய்ச்சலைச் சீரணித்துக் கொண்ட மாணவர்கள், அவற்றைப் பொருத்தமாக வெளியிடுவதற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான செயல்முறை பாடசாலை அரங்கில் "உட்பாய்ச்சல்", "வெளிப்பாய்ச்சல்" என்ற எண்ணக்கருக்களால் விளக்கப்படும்.

காகமும் முயலும் பேசுமா என்ற கேள்விகளை எழுப்புவது பாடசாலை நாடகங்களின் நோக்கமன்று. கற்பனைகள், அசைவுகள், மனவெழுச்சிகள், அழகியல் உணர்வுகள் என்பவற்றினூடே உளவியற் சமநிலைகளை உருவாக்குதலே இந்த அரங்கில் சிறப்பிடம் பெறல் வேண்டும் என்ற இலக்கை நோக்கிய, நேர்முகமான பெயர்ச்சியைக் காணலாம்.

"சகலகலா வல்லியே", "சத்திய சோதனை", "திக்கு விஜயம்" போன்றவை இடைநிலைப்பாடசாலைகளுக்குரிய நாடகங்களாகும். சகலகலா வல்லியே என்ற நாடகத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கினர். தி. செல்வநிதியினால் இந்த நாடகம் நெறியாள்கை செய்யப்பட்டது. வேம்படி மகளிர் கல்லூரியினால் வழங்கப்பட்ட சத்திய சோதனை நாடகத்தை குழந்தை ம. சண்முகலிங்கம் நெறியாள்கை செய்தார். யாழ். இந்துக் கல்லூரி மாணவர் வழங்கிய திக்கு விஜயம் நாடகத்தையும் குழந்தை ம. சண்முகலிங்கம் நெறியாள்கை செய்தார்.

இந்நாட்டின் கல்விப்பிரச்சினைகள், கட்டிளைஞர்கள் எதிர்நோக்கும் மன உரசல்கள், சமூகத்தளங்களின் வேறுபாடுகளுக்கேற்றவாறு கவிந்தெழும் சிந்தனைகள், சமகால உந்தல்கள் முதலியவை இந்த நாடகங்களில் உள்ளடக்கமாக அமைகின்றன.

"தம்மை வெளிப்படுத்தல்" என்ற தனி இலக்கு இந்நாடகங்களில் "சமூக நோக்கிலே தம்மை வெளிப்படுத்தல்" என்ற பொது இலக்காக வளர்த்தெடுக்கப்படுகின்றது. ஆழமாக நோக்குதல், ஆழமாக ஒலி நுகர்தல், மேலும் ஆழமாக அன்றி நிதானமாக உணர்ச்சிகளுடன்சங்கமித்தல் முதலியன சிரேஷ்ட இடைநிலை மாணவர்களிடத்து விருத்தி செய்யப்படக் கூடிய நாடக உபாயங்களாகும். இவற்றைப் பாடசாலை நாடகங்களிலே கையாளும் பொழுது பார்வையாளர் அற்ற அரங்கு முகிழ்த்தெழும் வகையில் வடிவமைப்பு மேற்கொள்ளப்படும். உண்மையில் பார்வையாளரும் நடிகர்களும் என்ற பகுப்பு செயற்கையானதுதான்.

ஒவ்வொருவரும் சிருஷ்டியை மேற்கொள்ள வேண்டும் — சிருஷ்டியாளராக மாறவேண்டும் என்பதை இலக்காகக் கொள்வதே, பாடசாலை அரங்கின் முதன்மைப் பண்பு, இவற்றோடிணைந்ததாக ஒத்திசைவு கொண்ட ஒரு குழுவை ஆக்கும் பிரயத்தனம், பாடசாலை அரங்கில் மேற்கொள்ளப்படும்.

மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது பாடசாலை அரங்கு எளிமையாகத் தோன்றினும், அது வெகுசிக்கலான பண்புகளின் இடைவினை கொண்ட தொகுதியாகும். கல்விச் செயற்பாடுகளையும் மாணவரது ஆளுமையையும் முழுமைப்படுத்தி ஒன்றிணைத்தலும், பாடசாலை அரங்கின் மிகச் சிரமமான பணியாகும். இடைவினைகளாலும். சூக்குமப் படுத்தலாலும் இந்தப் பணியை நிறைவேற்றி வைக்க வேண்டியுள்ளமையால் இது வெகுசிக்கலான பணியென்று கொள்ளப்படுகின்றது.

பாடசாலை அரங்குகளில் மாணவர்களிடத்து "ஆக்கநிலை உந்தலை" ஏற்படுத்த வேண்டியுள்ளது. உடல், உள்ளம்,

(11ஆம் பக்கம் பார்க்க)

---

## விமர்சனம்

### இனிக்கும் தமிழ்

வாகரை வாணன்

விலை ரூபா: 20/=

கவிஞர் வாகரை வாணனின் 'இனிக்கும் தமிழ்' கட்டுரைத் தொகுப்பு, அண்மைக் காலத்தில் வெளிவந்த ஈழத்து இலக்கிய ஆக்கங்களுள் தனியானது எனலாம். இவரது இந்த ஆக்கம், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள் என்னும் வழமையான வகைகளுக்குள் விழாது, தமிழ்க் கவிதை இலக்கியத்தை இதுகாலவரை அறியாத புதியவர்களுக்கும் இளையவர்களுக்கும் பரவலாக அறிமுகப்படுத்தும் நோக்கோடு எழுந்த, தமிழ்க் கவிதை நயப்பின் தொகுப்பாகும்.

பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து இன்றைய புதுக்கவிதை வரை கவிஞர் வாகரை வாணன் தனது நயப்பை விரித்துள்ளார், கவிஞர் முருகையன் கூறியுள்ளது போல், இது தமிழ்க் கவிதை இலக்கியத்தை நோக்கிய ஓர் 'ஆற்றுப்படை'யே எனலாம். பாரதி, பாரதிதாஸன், தேசிக விநாயகம்பிள்ளை, கண்ணதாசன், மு. மேத்தா என்று நவீனகாலக் கவிஞர்களை அறிமுகப் படுத்தும் ஆசிரியர், அதே வீச்சில் கம்பன், ஒளவையார், வள்ளுவர், இன்னும் பின்னே சென்று, புறநானூற்று பிசிராந்தையார்வரை, தனது அறிமுகப்படுத்தலை நீட்டியே உள்ளார். பாரதியின் நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் எடுத்துக்காட்டும் இவர், பாரதிதாசனிடம் அவை இன்னோர் விதத்தில் வீறுகொள்வதையும் விளக்குகிறார். தேம்பாவணியில் தித்திக்கும் வீரமாமுனிவர் பாடல்களையும், தேசிக விநாயகம்பிள்ளையிடம் சிறப்புப் பெறும் பிறமொழிக் கவிதைச் செல்வாக்கையும், கம்பனின் கார்கால கவித்துவ வர்ணனைச் சிறப்புகளையும், சில தத்துவக் கீற்றுக்களை கண்ணதாஸன் பாடல்களிலும் கண்டு நயக்கிறார்.

திசைமுகன்

தனிப்பாடல்கள் பற்றி இவர் பேசவரும் போது தேர்ந்தெடுத்துள்ளபாடல்கள், மிகச் சிறப்பு வாய்ந்தவையாக இருப்பதோடு, இக்காலத்துக்கு மிக அவசியமானவையாகவும் உள்ளன.

எக்காலத்திலும் ஒருவனுக்கு லட்சணத்தைத் தருவது அவன் தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதே. இப்படி ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை தத்தமது காலதர்மங்களுக்கேற்பக் கடைப்பிடிப்பார்களேயானால், நாட்டில் அமைதியும் சுபீட்சமும் ஓங்குவதற்குத் தடையிராது. புறநானூற்றில்வரும் பொன்முடியார் என்னும் புலவரின் பாடலைத் தந்து விளக்குவதன் மூலம், வாகரை வாணன் இக்கருத்தை மக்கள் முன் அழகாக வைக்கிறார். அப்பாடலைப் பாருங்கள்:

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே / சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே / வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே / நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே / ஒளிறுவாள் அருஞ் சமம் முருக்கிக் / களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே'/

ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து அதனை உயிருக்குயிராய் வளர்த்தெடுத்தல் தாயின் கடன், ஈன்ற மகவை சான்றோனுக்கல் தந்தையின் கடன், அவ்விளைஞனுக்குப் படைக்கலம் வடித்துக் கொடுத்தல் கொல்லனது கடன், நல்லவழியில் அவனை வழி நடத்துதல் நாடாளும் வேந்தனின் கடமையாகிறது.

புலவர் பொன்முடியார் கூறும் இவை இன்று எவ்வளவு நமக்கு அவசியம் என்பது சொல்லத் தேவையில்லை. ஆட்சியில் உள்ளவர் நல்லாட்சி செய்வார்களானால் இளைஞர்கள் தறிகெட்டுப் போவதற்கு இடமில்லை என்பதை. இது காட்டுகிறது.

இவ்வாறு, ஒவ்வொரு புது அத்தியாயத்திலும் ஒவ்வொரு புது அம்சத்தினைக் கோடிகாட்டிச் செல்லும் வாகரை வாணனின் நூல் நல்ல பணியே செய்கிறது.

எனினும், இந்நூலை ஓர் ஆழ்ந்த கவிதைக்குரிய விமர்சன நூலாகக் கொள்ள முடியாது. இத்தகைய நூல்களை வேறு சில விமர்சகர்கள் டி. கே. சி. பாணியில் அமைந்த 'ரசிக விமர்சன' நூல்கள் எனச் சொல்வதுண்டு. ஆனால் இவர் ஆழ்ந்த விமர்சனம் செய்யவரவில்லை, தமிழ்க் கவிதைப்பரப்பை அறிமுகப் படுத்தும் ஓர் நயத்தலையே செய்கிறார் என நாம் இவர் பணிக்கு ஆதரவாகக் கூறினும், இந்த ஆழ்ந்த நோக்கு ஓரளவாவது இதில் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இந்நூல் மேலும் சிறப்புற்றிருக்கலாம், எனக் கூறலாம்.


இக்காரணத்தால் தான், புதுக்கவிதைப் பூக்கள் பற்றிய அத்தியாயத்தில் மேத்தா, அப்துல் ரகுமான், காமராசன், போன்றவர்களது கவிதைகள் பெரிதாக நயக்கப்பட்டுள்ளன. இவர்கள் அநேகமாக இன்றைய சில புதுக்கவிதை போர் மூலா (FORMULA) கவிஞர்களே ஒழிய, உண்மையான ஆழமானவற்றில் வேர் ஊன்றி நிற்பவர்களல்ல. இதனால் தான், வாகரை வாணனால் எடுத்துக்காட்டப்படும்,

"வான உற்சவத்தின்
வாண வேடிக்கை
முகிற் புற்று கக்கும்
நெருப்புப் பாம்புகள்"

என்னும் மின்னல் பற்றிய அப்துல் ரகுமானின் கவிதை வரிகள், ஆழமான படிமங்களுக்கு எடுத்துக் காட்டெனக் கூற முடியாது. இவற்றைப் புதுக்கவிதைக்கு உதாரணங்களாக எடுப்பதாய் இருந்தால், இவற்றைவிட ஆழத்தைக்காட்டும்- இவர்களது கவிதைகளுக்கெல்லாம் முன்னோடியான - தர்மு சிவராமுவின் கவிதைகளை எடுத்துக்காட்டியிருக்கலாம். தர்மு சிவராமுவின் மின்னல் என்ற கவிதை இவற்றைவிட படிம ஆழங்கொண்டது எனக் கூறலாம்.

இவை போன்ற சில குறைகளைத் தவிர, இந்நூல் மிக அவசியமான பணியைச் செய்கிறதென்றே கூறலாம். அழகு தமிழ் கவிதைப் பரப்பின் நறுமணம் சுமந்துவரும் பணியால், இது சிறப்படைகிறது. □

# முற்றுகை இடப்பட்ட இரண்டு வாரங்கள்



யாழ். கோட்டை அருகில் கைவிடப்பட்டிருந்த வாகனங்கள்

கடந்த 21 ஆம் திகதி ஞாயிறு, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டம் தொடங்கிற்று. அதிகாலை 4.30 மணியளவில் குண்டுவெடிப்புகளும், துப்பாக்கி வேட்டு அதிர்வுகளும் யாழ் மக்களை விழித்தெழச் செய்தன.

யாழ்நகரைத் திரும்பக் கைப்பற்றுவதற்கான முனைப்பில் விடுதலைப்புலிகள் மணியந்தோட்டத்திலுள்ள ஈ.என்.டி.எல்.எவ். முகாமைத் தாக்கத் தொடங்கியிருந்தது. இதைத்தொடர்ந்து அப்பகுதியில் ஹெலிகொப்டர்கள் சுற்றத்தொடங்கின, நிலைமை அவதானிக்கப்பட்டது.

முக்கிய விடுதலைப்புலிகளின் போராளிகள், வள்ளங்கள் மூலம், இரவோடு இருளாக மணியந்தோட்டத்திற்கும் மண்டைதீவிற்கும் சென்று இறங்கினர்.

இச் சந்தர்ப்பத்தில், விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டவர்களை மீட்டெடுக்கும் முயற்சியில் இந்தியப்படை இயங்கியது. 'திசை' க்குக் கிடைத்த தகவலின்படி, ஏற்கெனவே 'வோக்கிரோக்கி' மூலம், இந்தியப் படையினரை இவ்விவகாரத்தில் பங்கெடுக்க வேண்டாம் என்று விடுதலைப்புலிகள் எச்சரித்தபின்னரும் அவர்கள் அதைமீறி, அவர்களது காவல்பகுதிக்குள் நுழைந்தபோது, கண்ணிவெடி இயக்கப்பட்டு தாக்குதலுக்குள்ளானார்கள்.

இதுபற்றி இந்திய வானொலி பின்னர் அறிவிக்கையில், 8 இந்தியப்படையினர் கொல்லப்பட்டதாகவும் 10பேர்வரை காயமடைந்ததாகவும் கூறியது.

இப்படிக் கொல்லப்பட்டவர்களில் காப்டன் சசிகுமாரும் ஒருவரெனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பழிவாங்குவதுபோல மணியந்தோட்டத்திலுள்ள சில வீடுகள் எரிக்கப்பட்டன, அப்பகுதி ஷெல் தாக்குதலுக்குள்ளானது.

மணியந்தோட்டப் பகுதி மக்கள் பீதியினால், தமது மூட்டைமுடிச்சுகளோடு, யாழ்ப்பாணத்தை நோக்கி வெளியேறினர்.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில், காயமடைந்த சில ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக யாழ். ஆஸ்பத்திரி மூடப்பட்டதோடு அங்கிருந்த நோயாளிகள் வீட்டுக்குப் போகும்படி பணிக்கப்பட்டனர். 1987 ஒக்ரோபரில் நடந்த நிகழ்வுகள் இன்னும் ஆஸ்பத்திரி ஊழியரின் நினைவில் இருக்கவே செய்தன, ஆனால் இரண்டே இரண்டு வைத்தியர்கள் மட்டுமே அங்கு தங்குவதற்குச் சம்மதித்தனர்.

திங்கட் கிழமையும் குண்டு வைப்பு, துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டுதான் இருந்தன. அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள் பூட்டப் பட்டுக் கிடந்தன. வாகனங்கள் எதுவும் ஓடவில்லை. மக்கள் தம் வீடுகளை விட்டு வெளியே தலைகாட்டவில்லை. நகரில் ஊரடங்குச் சட்டம் நிலவிய நிலை.

அடுத்துவந்த செவ்வாயும் புதனும் நிலைமையில் மாற்றங்கள் எதுவும் தராமலே நகர்ந்தன. ஆனால் ஒரு விதிவிலக்காக, கொழும்பு நோக்கிச் செல்லும் பஸ்வண்டிகள் நல்லூர் கோவில் அருகாமையில் இருந்து ஓடத்தொடங்கின.

உயிரோட்ட ஜனநடமாட்டத்தின் கருக்கூட்டல் வியாழன் காலை தொடங்கிற்று. சில கடைகள் அரையும் குறையுமாகத் திறக்கப்பட்டு நிலைமையை அவதானித்தன. இருந்ததைவிட வாகனப் புழக்கம் சிறிது கூடியிருந்தது. பாதசாரிகள் பாதையில் மிக அவதானமாக நடந்து திரிந்தனர்.

வெள்ளி 26 ஆம் திகதி வரை கலங்கல் தெளியாத நிலையே தென்பட்டது. இந்தியப்படை யாழ்நகரை விட்டு மிக மெதுவாக வெளியேறிக் கொண்டிருந்தது. யாழ். மாநகர சபை திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தது, ஆனால் கச்சேரி இன்னும் மூடப்பட்டே கிடந்தது அதேநேரம் இன்னும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் யாழ்நகர் வராமல், இன்னும் அவர்களால் முற்றுகையிடப்பட்ட நிலையிலேயே இருந்தது. இந்தியப்படை யாழ்நகரை விட்டு முற்றுமுழுதாக நீங்குவதற்கான முன் ஏற்பாடாக அவர்கள் இலங்கை வங்கியில் வைத்திருந்த கணக்கு மூடப்பட்டது தெரியவந்தது. □

## முற்றுகை நீங்க நகர்ப் பிரவேசம்

27 ஆம் திகதி சனிக்கிழமை காலை, நிலவி வந்த ஸ்தம்பித நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவே விடிந்தது. நகரின் முக்கிய கேந்திர நிலையங்களில் இருந்து இந்தியப்படை வெளியேறியது. குறிப்பாக பண்ணைப் பகுதியில் நிலைகொண்டிருந்த தீவுப் பகுதி போக்குவரத்துகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்த இந்தியப்படை அப்புறப்படுத்தப்பட்டது.


காலையில் நான்கு புறமும் இருந்து வந்த விடுதலைப்புலிகள் ஆயுதபாணிகளாக நகருள்பிரவேசித்தனர்.

தடைகள் நீங்கியதால் வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்தது யாழ். டச்சுக் ஆஸ்பத்திரி வீதி-கே.கே.எஸ். வீதிச் சந்தியிலிருந்து யாழ் கோட்டைப் பக்கமாகச் செல்லும் பாதை வெகு நாட்களுக்குப் பின்னர் தடைகள் அகற்றப்பட்டு திறந்து விடப்பட்டது.


இதுகால வரை பொதுஜன நடமாட்டத்துக்குத் தவிர்க்கப்பட்டிருந்த பகுதிகள் - குறிப்பாக அசோக் ஹோட்டல் பகுதி- யாவும் சனப்புழக்கத்துக்குள்ளாகின.

சில இடங்களில் புலிக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

மாலையில் வெடிகள் கொளுத்தப்பட்டு, மக்கள் குழுமி நின்று ஆரவாரம் செய்தனர்.



யாழ். ஆஸ்பத்திரியின் முன்புறம் இந்தியப்படை கைவிட்டுச் சென்ற மண்மூடை அரண்



நான்கு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த பண்ணை வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது.

### புற்றுநோய்க் கண்காட்சி பின்போடப்பட்டது.

தெல்லிப்பளை வர்த்தலைவிளான் புற்று நோய் விடுதியில் வட மாகாண புற்றுநோய்ச் சங்கத்தினால் சென்ற மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த புற்றுநோய்க் கண்காட்சி, மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்று, மேற்படி சங்கத்தின் தலைவர் டொக்ரர் எம். ஜெகநாதன் அறிவித்துள்ளார்.

### கண்காட்சி

அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்படும் பாலர் ஆசிரியப் பயிற்சி நெறியில் பங்குகொள்கின்ற ஆசிரியர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி, எதிர்வரும் 3 ஆம் திகதி, கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உபதலைவர் அ. நல்லதம்பி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

## யாழ்ப்பாண மக்கள் யாழ்ப்பாணத்தைப் பார்க்கின்றனர்

யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் டச்சுக் கோட்டையில்முதலில் ஸ்ரீலங்கா இராணுவமும், தொடர்ந்தாற்போல, 1987 ஒக்ரோபர் முதல் இந்திய அமைதிப் படையினரும் முகாம்களை அமைத்து இருந்தனர். இதனால் கோட்டையைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் மனித நடமாட்டத்துக்கும் போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் போக்குவரத்துத் தடைகளும் நீக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மக்கள் திரள்திரளாகச் சென்று வீரசிங்கம் மண்டபம், திறந்த வெளி அரங்கு, பண்ணை மீன் சந்தை, நூல் நிலையம், முனியப்பர் கோயில், ஆகியனவற்றைப் பார்த்த வண்ணமிருக்கின்றனர்.

இப்போது யாழ்ப்பாண மக்களே யாழ்ப்பாணத்தைப் பார்க்கின்றனர்!

### அரிச்சுவடி ஏடுகள் இலவசம்

தைப்பூசத் தினத்தன்று வித்தியாரம்பம் செய்துவைக்கும் சங்கங்களுக்கும், சபைகளுக்கும், யாழ்ப்பாணம் ''மிலெக்வைற்'' தாபனத்தார் அரிச்சுவடி ஏடுகளை இலவசமாக வழங்க முன்வந்துள்ளார்கள்.

# "தேசியக் கொடி" தமிழ்பேசும் இனம் ஏற்கக்கூடியதா?

1948 பெப்ரவரித் திங்கள் 4 ஆம் நாளில் இலங்கைத் தீவு பிரித்தானிய கொலனி ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றதாகப் பகரப்படுகிறது

ஆயினும், சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் இத் தீவில் வதியும் மக்கள் சகல தரப்பினரதும் நியமத்தைத் தாங்கி நிற்பதாக — அதற்கு ஏற்புடைத்தான — ஒரு தேசியக் கொடி தெரிந்து சொள்ளப்படவில்லையே !

எதிர்பார்க்கப்பட்ட சுதந்திர தின வைபவத்தின் போது வைபவ முறைப்படி பிரித்தானிய யூனியன்ஜாக் கொடி இறக்கப்பட வேண்டும்; சமகாலத்தில் சுதந்திர இலங்கையின் புதிய தேசியக் கொடி அதே பிரகாரம் வைபவ ரீதியாக ஏற்றி வைககப்படல் வேண்டும்.

அச் சந்தர்ப்பத்திற்கு உபயோகிக்கப்படும்பொருட்டு வாளேந்திய சிங்கக் கொடியே தீவின் தேசியக் கொடியாகத் தெரிந்து கொள்வதாக, இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பந்தப்பட்ட காலத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களது வாராந்த விடு முறைக்காக நாடாளுமன்றம் பிரதி வாரமும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு ஒத்திவைக்கப்படுவது சம்பிரதாயம்.

வாளேந்திய சிங்கக் கொடி தீவின் தேசியக் கொடியாக நாடாளுமன்றம் பெரும்பான்மை வாக்குகளால் திணிக்கப்படாது காத்துக்கொள்வதற்கு, மேற்படி சம்பிரதாயத்தையே சாதுரியமாக உபயோகிக்கத் தலைப்பட்டார், அந் நாட்களில் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்த அகில இலங்கைத் தமிழ்க் கொங்கிரஸ் தலைவர் ஜீ ஜீ. பொன்னம்பலம்.

தேசியக் கொடி குறித்த விவாதம் முற்றுப்பெறுத நிலையில் வாக்கெடுப்புக்கு விடப்படாது, சம்பந்தப்பட்ட மேற்படி வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 3-59 க்கு மேலும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

அக்கட்டத்தில் ஜீ ஜீ பொன்னம்பலத்தினல் உசுப்பிவிடப்பட்ட அவரது சகாவும், வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான கனகரத்தினம், சரியாக பி. ப. 4-00 மணிக்கு ஒத்திவைப்புப் பிரேரணையை முன் மொழிய, தமிழ்க் கொங்கிரஸ் தலைவர், ஜீ ஜீ. பொன்னம்பலம் பிரேரணையை வழிமொழிந்தார்.

### திரவியம்

பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவோ, தேசியக் கொடி மீதான பிரேரணையை எப்படியும் அன்றைய தினமே நிறைவேற்றி விடவேண்டும் எனும் துடிப்புடன், பிரேரணை மீதான தமது பதிலுரையை இடை நடுவில் நிறுத்திக் கொண்டு, உடனடியாகவே வாக்கெடுப்பை நடாத்த முன்வந்தார்.

ஜீ. ஜீ பொன்னம்பலமோ ஒத்திவைப்புத் தீர்மானம் மீதான சபாநாயகரின் தீர்ப்பை வலியுறுத்தினார். சபாநாயகர் மொலமுறே. நாடாளுமன்ற ஒழுங்கு முறைகளை அனுசரித்து, தேசியக் கொடி மீதான வாக்கெடுப்பை அனுமதியாது, கனகரத்தினத்தின் ஒத்திவைப்புப் பிரேரணையை ஏற்றுச் சபையை ஒத்திவைத்தார். அதன்வாயிலாக வாளேந்திய சிங்கக் கொடியைத் தமிழ் முஸ்லிம் மக்களின் நியமத்தையும் தாங்கும் கொடியாகத் திணிக்கும் முதல் எத்தனம் தவிடு பொடியாக்கப்பட்டது,

அதன் பின்பே, இத் தீவுக்கான ஒரு தேசியக் கொடியைத் தெரிவு செய்யும் பொருட்டாக, மேல் சபையையும் உள்ளடக்குவதாக, ஒரு நாடாளுமன்ற உப குழு நியமிக்கப்பட்டது.

மேற்படி நாடாளுமன்ற உபகுழுவில், அதற்கிடையே மீன்பிடிக் கைத்தொழில் அமைச்சராக மாறிவிட்ட ஜீ. ஜீ. பொன்னம்பலமும், செனேட் சபை உறுப்பினர் எஸ். நடேசனும், டி பி. ஜாயாவும், சிறுபான்மையோர் பிரதிநிதிகளாக அமர்ந்திருந்தனர்.

திரும்பவும் வாளேந்திய சிங்கக் கொடியே, அமைச்சராகிவிட்ட ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் விருப்பத்துக்கு இணக்கமாக; தமிழ், இஸ்லாமிய மக்களைப் பிரதிபலிக்கும் பச்சை, செம்மஞ்சள் வர்ணக் கோடுகளை உள்ளடக்கியதாய் தீவின் தேசியக் கொடியாக, மேற்படி நாடாளுமன்ற உபகுழுவினுல் பரிந்துரைக்கப்பட்டது. ஆயினும் அப்பரிந்துரை அறிக்கையில் மேற்படி சிபார்சுக்கு விரோதமான செனேட்டர் நடேசனின் மறுப்பும் உள்ளடக்கப்பட்டிருந்தது. தேசியக் கொடி மீதான சம்சந்தப்பட்ட நாடாளுமன்ற உபகுழு சமர்ப்பித்திருந்த சிபார்சு அறிக்கை, செனேட்டர் நடேசனின் மறுப்புடன் ஒருசேர, சனப்பிரதிநிதிகள் சபை மற்றும் செனேட் சபை (நாளாந்த) நடவடிக்கைப் பதிவேடுகளில் பதிவில் இடப்பட்டுள்ளது, (இத்தீவின் இனப் பிரச்சினை மீது ஆய்வு நடத்த முற்படுவோர் யாவரும் அலசி ஆராயவேண்டிய ஒரு முக்கிய ஆவணம், செனேட்டர் நடேசனின் சம்பந்தப்பட்ட மறுப்பு எனலாம்.)

வாளேந்திய சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக ஏற்க மறுத்து. தமிழரசு தலைவர் தந்தை செல்வநாயகம், தலைநகர் கொழும்பில் தமது மோட்டார் வண்டியில் யாழ்ப்பாண ராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியின் நந்திக் கொடியைப் பறக்க விட்டிருந்தார்.

பேராசிரியர் சுந்தரலிங்கம் வாளேந்திய சிங்கக் கொடியை ஆட்சேபித்து, தமது நாடாளுமன்ற ஸ்தானத்தையே துறந்து, கொடிப் பிரச்சினை மீது வவுனியாத் தேர்தல் தொகுதியில் ஓர் இடைத் தேர்தலை நடாத்தும்படி, நிர்ப்பந்தித்தார். நடைபெற்ற இடைத் தேர்தலில் ஜெயித்ததன் வாயிலாகத், தமிழ் மக்கள் வாளேந்திய சிங்கக் கொடியை நிராகரித்து விட்டதை, உலகு அறியும்படி பகிரங்கப்படுத்தினர்.

தீவின் சுதந்திரத் தினக் கொண்டாட்டங்களின்போது, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்கக் கொடியை எரித்தபோது கொல்லப்பட்டு திருமலை நடராசன் தியாகியானதும், தமிழ் இளைஞர் பலர் கைது செய்யப்பட்டு சிறைவாசம் சென்றதும், தெரிந்தகதை. வாளேந்திய சிங்கக் கொடியையே ஏற்காத தமிழ் மக்களின் நியமமாகவும். பின்னல் பௌத்த மத சின்னமாகிய அரச மர இலைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பது, இத்தீவின் இனப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான அரசியல் தீர்வு காண முற்படுவோர் சகலரதும் சிந்தனையைத் தூண்டுவதாகவுள்ளது. சீர்தூக்கி சீர்செய்யப்பட வேண்டிய பிரச்சினைகளுள் இத் தீவின் தேசியக் கொடியும் முக்கியமானதொன்றே. □

## அஸர்பைஜான் நிலவரம்

அஸர்பைஜான் தலைநகரான பக்கூவில் இருந்து இராணுவ வீரர்களின் குடும்பங்களுடன் வெளியேறவிருந்த கப்பலை துறைமுகத்திலிருந்து வெளியேற விடாது ஒரு கூட்டம் தடுத்தது.

இதை, மொஸ்கோவில் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அயல் நாட்டமைச்சரின் பேச்சாளர் கென்னடி சராஸிமோவ் அறிவித்தார்.

கப்பலுக்குள் கொல்லப்பட்ட அஸர்பைஜானியர்கள் பிரேதங்கள் இருப்பதாகவும் ஆகவே, பரிசோதனை செய்ய வேண்டுமென்று அவர்கள் கோரினர். கப்பலில் பிரேதங்கள் இருக்கவில்லை.

பக்கூவில் நிலைமை இன்னும் அமைதியடையவில்லை என்று நகரத்தின் ராணுவக் கமாண்டர் அறிவித்தார். தீவிரவாதக் குழுக்கள் துருப்புகளைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன ராணுவ வீரர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் சென்ற வாகனங்கள் தாக்கப்பட்டுள்ளன. அகதிகள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

## கே. ஜி. பி.யில் புதிய மாற்றங்கள்

கே. ஜி. பி. ஸ்தாபனத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதற்குள்ளே பகிரங்கத் தன்மை புகுந்தப்பட்டுள்ளது. ஸ்டாலின் காலத்தில் நடந்த சட்டமீறல்களுக்கும் அக்கிரமங்களுக்கும் இனி மேல் இடம் கிடையாது.

இவ்வாறு கே, ஜி. பி. உயர் அதிகாரி இவான் பிதோஸேயேவ் அறிவித்தார்.

ஸ்டாலின் காலத்தில் ரகசியமாக படுகொலை செய்யப்பட்டு கிவோவாரிஹா என்ற சைபீரிய கிராமத்தில் புதைக்கப்பட்டவர்களின் சடலங்கள் அண்மையில் கே. ஜி பி.யாலேயே கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மாற்றங்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கை புகுத்தப்பட்டுள்ளது.

கே. ஜி, பி. போன்ற அரச பந்தோபஸ்து அமைப்புகள் பற்றிய சட்டங்கள் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படவுள்ளன. இது கே. ஜி. பி. யின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும்.




"உழைப்பே உயர்வுக்கு வழி"
மகாத்மா காந்தி
நினைவு தினம் 30-1-90

மில்க்வைற் சோப்
மேலுறைகளிலிருந்து
300 திருக்குறள்
அனுப்பி பள்ளிச் சிறுர்களுக்கான,
கவர்ச்சியான
"காந்தி பாடசாலைப் பை"
ஒன்றினைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

"மில்க்வைற்"
யாழ்ப்பாணம்.

## சிறுகதைப் போட்டி

கொழும்பிலுள்ள 'கல்வி ஊழியர்களின் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம்' தனது அங்கத்தவர்களிடையே தமிழ்ச் சிறுகதைப் போட்டியொன்றை நடத்துகிறது.

இபபோட்டி, மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நடத்தப்படும்.

மாவட்ட மட்டத்திலான போட்டியில், பரிசுகளாக 31,000 ரூபா பங்கிட்டு வழங்கப்படும். தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகளாக, முறையே ரூபா 3000/=, 2000/=, 1000/= வழங்கப்படும்.

போட்டியின் முடிவு திகதி மார்ச் 31 ஆம் திகதி ஆகும்.

1987 இல், சிங்களச் சிறுகதைப் போட்டியொன்றை இச்சங்கம் நடத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமல அன்னை இல்லத்துக்கு தண்ணீர்த் தாங்கி அன்பளிப்பு

சென்ற வருடம் பெப்ரவரி 2 - ஆம் திகதி அகால மரணமான யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியேந்திரா, ஜெகநாதன் ஆகியவர்களின் நினைவுதினம் இன்று வெள்ளியன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அரியாலை அமல அன்னை அநாதைச் சிறுவர் இல்லத்திற்கு, இவர்களது நண்பர்கள், இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக ரூபா 45,000 செலவில் தண்ணீர்த்தாங்கி ஒன்றைக்கட்டிக் கையளிக்க உள்ளார்கள்.

பஹ்ரெயின் மாலைதீவு
நாடுகளில்
வேலைவாய்ப்பு

பஹ்ரெயின் (Bahrain)
வெல்டர்கள் (10) ஆட்கள்
சுப்பர்வைசர் (கட்டிடப்பகுதி) (5) ,,
மேசன் (6) ,,
தொழிலாளர்கள் (19) ,,

மாலைதீவு (Maldives)
ஆராய்ச்சியாளர் (2) ஆட்கள் (கடல் நீரிலிருந்து உப்பைப்பெறல்)
வெல்டர்கள் (2) ,, (வெலயித் அனுபவம்)
வெல்டர்கள் (2) ,,
டெயிலர்கள் (4) பெண்கள்
கட்டர் (1) ,,
சலவைத் தொழிலாளர் (2) ஆண்

சாப்பாடும் இருப்பிடமும், 2 வருட. ஒப்பந்தம் அளிக்கப்படும்.
பாஸ்போட், 4 படங்கள் அனுபவ சான்றிதழுடன்
தொடர்பு:
டாக்டர் விஸ்வநாதன்,
"ராஜஸ்தான்"
கீரிமலை றேட்,
சண்டிலிப்பாய்
A/8/90

## எனது உலகம்

வாசமொழி பேசும்
வண்ண மலரினங்கள்
பாசமாய் பற்றிவருடும் காற்று.
நேசக்குரலெடுத்து
இசைபாடும் புள்ளினங்கள்
கோஷம் செய்து
கொண்டாடும் கடலலைகள்
கண்சிமிட்டி காதல் செய்யும்
நட்சத்திரங்களுக்குள்
நிஜமாய் சிரிக்கும் நிலா.

இவை நடுவே —
கவிஞனுக்கு ஓர்நாளும்
தனிமை இல்லை.
இருப்பினும் தோழனே ....
நீ இல்லாமை
ஓர் வெறுமையே!

உன்னுடைய
உலோக உலகிற்கும்
எனக்கும் சம்பந்தமில்லை.
ஆனாலும் —
என் பசிய புல்வெளிக்கு
நீ வர
என் சம்மதமுண்டு.

அங்கே —
அகன்ற வான்வெளியில்
அருகருகே பறக்கலாம்;
புதிதாய் இங்கோர்
சரித்திரம் நிகழலாம்!

— விவேக் □

## இறுதியில்...

வடலிப்பனைகள்
நெருஞ்சி முட்கள்.

விலகி வளைந்த
ஒற்றைப்பாதைகள்.

எண்ணிய பயணத்தில்
எண்ணற்ற பாதங்கள்.

ஒன்றையொன்று தொடர்ந்தபோது
நம்பிக்கை வளர்ந்தது.

சுமைகள் பெருக்க
சுவடும் பெருத்தது.

பாதைகள் அகல,
விலகல்கள் முந்தல்கள்

மோதல்கள் வீழல்கள்
தாக்கங்கள் அழுத்தங்கள்.

புதிய பயணம்.
குருட்டுச் சனங்கள்
ஊமைகளாகியும்
வேலிச் சண்டையில்.

வடலிப் பனைகள்
பாதையில் படுத்து
பயணம் மறித்தன.

நெருஞ்சி முட்கள்
கனரகமிதிப்பிற்குள்
காலமாயின.

தொலைந்துபோன
ஒற்றைப் பாதைகள்—
தேடிப்பார்க்கிறேன்.

தனித்து நின்று
தவ்த்துப் பார்க்கிறேன்;
சாம்பல்மேட்டில் தேசியக்கொடி,

அதுகூட
நமதல்ல.

— யதார்த்தன் □

# நகரங்களல்ல, கிராமங்களே தேவை

இந்தியாவின் வறுமைக்கும் நிலச் சீரழிவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்தியாவின் மொத்த 33 கோடி ஹெக்டேர் நிலப்பரப்பில் அரைவாசிக்கு மேல் ஏதோ ஒரு விதத்தில் சீரழிந்த நிலையில் உள்ளது.

நிலச் சீரழிவு நடைபெறும் வேகம் பயங்கரமானது. ஆண்டு தோறும் 15 இலட்சம் ஹெக்டேர் காடுகள் மறைகின்றன. இன்னுமொரு 10 இலட்சம் ஹெக்டேர் நிலம் தவருன உபயோகத்தின் விளைவாக சீரழிகின்றது.

காடு அழிய நில அரிப்பு அதிகரிக்கும்; பசளை மண் மழை நீரால் அடித்துச் செல்லப்படும். அதைப் போன்றே, அதிக அளவு செயற்கை உரப் பிரயோகம், தவருன உழவு முறையும் நிலம் சீரழியக் காரணமாகின்றன.

நிலச் சீரழிவு இந்தியாவின் தலையாய பிரச்சினையாக உள்ளது. ஆனல், இந்தியாவில் மேய்ச்சல் நிலக் கொள்கை எதுவுமில்லை; மேய்ச்சல் புல்லு பயிரிடும் கொள்கை கிடையாது; தரமான கால்நடைகளை வளர்ப்பது பற்றிய கொள்கையும் வகுக்கப்படவில்லை.

வனப்பாதுகாப்பு பற்றிய திட்டத்தின்படி இந்தியாவின் மொத்த நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பகுதியான 10 கோடி ஹெக்டேரில் மரங்கள் வளர்க்கப்படுதல் வேண்டும். அதில் 7.5 கோடி ஹெக்டேர் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. 47 சத வீதம் மட்டும் தான் நிறைய மரங்கள் உள்ளன.

காடழிப்பு, விறகுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதோடு, பல ஆதிவாசிகளின் வாழ்க்கை முறையையும் கலாசாரத்தையும் பாதித்துள்ளது. கிராம மக்களுக்கு விறகும் மாட்டுத்தீனியும் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம், இப்பொழுது வேறு நோக்கங்களுக்காகத் திசை திருப்பி விடப்பட்டுள்ளது. கடதாசி ஆலைகளுக்கும் வீடமைப்புத் தொழிலுக்கும் மரம் பெறும் முயற்சியாக அது மாறறப்பட்டுள்ளது.

வறிய மக்கள் பெரும் சுழற்சியொன்றில் சிக்கிக் கொண்டுள்ளனர். அது அவர்களைக் கீழ் நோக்கி இழுத்துக் கொண்டிருக்கின்றது. வறுமையின் விளைவாக மக்கள் தம்மிடமுள்ள வளங்களை அளவிற்கு அதிகமாக உபயோகிக்கின்றனர். அதன் விளைவாக அவர்கள் முன்பிலும் பார்க்க அதிகம் வறியவர்களாக்கப்படுகின்றனர்.

சுதந்திரத்திற்குப் பின்பு தீட்டப்பட்ட ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டமும் வறுமை ஒழிப்பை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது. ஆனல் 40 ஆண்டுகளுக்குப் பின்பு இந்திய ஜனத்தொகையின் அரைவாசியினர், அடிப்படை வசதிகளின்றி வாழ்கின்றனர்.

நவீன தொழில்களைக் கொண்ட இந்தியாவை ஜவஹர்லால் நேரு கற்பனை செய்தார்; உருக்கு ஆலைகளும், உர ஆலைகளும், பெரிய அணைகளும், மின்சக்தி நிலையங்களும், நவீன விவசாயமும், விஞ்ஞானமும் கொண்ட ஒரு நாட்டை அவர் கற்பனை செய்தார்; அதன் மூலம், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஏற்பட்டதைப் போன்ற செல்வச் செழிப்பை, இந்தியாவிலும் காண முடியும் என்று எண்ணினர்.

தொழில் நுட்பத்திலும் விஞ்ஞானத்திலும் இந்தியா முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனல் இம்முன்னேற்றம் இந்தியாவின் ஏழை மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற வறியோருக்கு நன்மை பயத்துள்ளதா என்பது சந்தேகமே.

**கமலா சவுத்ரி**

கைத்தொழில் மயத்தின் மூலம் நேரு அடைய நினைத்த அபிவிருத்தி, கைகூடவில்லை. பெரிய கைத்தொழில்களை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் சூழலைப்பாதித்துள்ளன. அத்தகைய அபிவிருத்தி வறுமையை ஒழிக்கத் தவறிவிட்டது.

இப்பொழுது நாம் மறுபடியும் அடிப்படைக் சேள்விக்குத் திரும்பிவிட்டோம். அபிவிருத்தி என்றுல் என்ன? அபிவிருத்திக்காக நாம் எத்தகைய விலையைக் கொடுக்கத் தயாராகவுள்ளோம்?

கல்கத்தாவின் சேரியில் வாழும் ஒருவரிலும் பார்க்க, நாகாலாத்தில் அல்லது மிசோராமில் வசிக்கும் ஆதிவாசி பின்தங்கிய நிலையில் வாழ்கிருரா? முன்பு அரை மணி நேரத்தில் தனக்குத் தேவையான விறகைச் சேகரித்த பெண்ணிலும் பார்க்க, அதேயளவு விறகிற்காக ஆறு மணித்தியாலத்தைச் செலவிடும் இன்றைய பெண் நல்ல வாழ்க்கை வாழ்கிருரா?

பொருளியல் வல்லுனர்கள் 'ஆம்' என்றே பதிலளிப்பர். இந்தியா, 20 ஆண்டுகளுக்கு முன் இருந்ததிலும் பார்க்க, அதிக செல்வத்தைக் கொண்டுள்ளது.

ஆனல், பொருளியல் வல்லுனர்கள் நம்புவது போன்ற நிலைமை உண்மையில் இல்லை. மேற்கத்தைய நாடுகளுக்குப் பொருந்தும் பொருளியல் சித்தாந்தங்கள், பழைமை வாய்ந்த நாகரிகங்களுக்கு ஒவ்வாதிருப்பது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

சூழல் பற்றிய விடயங்கள் மக்களின் கவனத்திற்கு வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, மேற்கத்தைய நாடுகளின் கைத்தொழில் மயக் கொள்கை இந்தியாவிற்குத் தேவையா என்ற வினவை மகாத்மா காந்தி எழுப்பினர். சுதந்திரமான சிறிய கிராமங்களைக் கொண்ட குடியரசாக இந்தியா மிளிர வேண்டுமென்று கனவு கண்டார், காந்திஜி.

அவர் சொன்னர், "இந்தியா உண்மையான சுதந்திரம் பெற வேண்டுமாயின், மக்கள் நகரங்களிலல்ல கிராமங்களில்; மாளிகைகளிலல்ல குடிசைகளில்; வாழ வேண்டும்", என்று.

அவரின் கருத்தில் நியாயம் இருந்தது; மதியூகம் மிளிர்ந்தது. மக்கள் இயற்கையுடன் தொடர்புற்றவர்களாக வாழ வேண்டும் என்பதே அது. ஆதிவாசிகள் இதை அறிந்து வைத்திருந்தனர். நவீன சிந்தனையாளர்கள் இப்பொழுது தான் உணரத் தொடங்கியுள்ளனர்.

பழைய பாடத்தைப் புதுப்பிக்க வேண்டிய நிலைக்கு நாம் வந்துள்ளோம். காந்திஜியின் கருத்தை எள்ளி நகையாடியோர், இப்பொழுது அதிலுள்ள ஆழ்ந்த உண்மையை உணரத் தலைப்பட்டுள்ளனர். இயற்கையுடன் இணைந்து நாம் வாழ வேண்டும் என்பதே அது. இயற்கையை அழித்து வறுமையை அகற்ற முடியாது.

(பானேஸ்) □

## 21ஆம் நூற்ருண்டின் ஜனத்தொகை

1998ஆம் ஆண்டு உலக ஜனத்தொகை 6 பில்லியன் ஆக இருக்கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

வாஷிங்டன் புள்ளிவிவர பியூரோ இவ்வாறு தெரிவித்துள்ளது.

2040ஆம் ஆண்டில் உலக ஜனத்தொகை 10 பில்லியனுக இருககும். இந்தியாவில் 1590 மில்லியனும், சீனவில் 1554 மில்லியனும், நைஜீரியாவில் 471 மில்லியனும், பாகிஸ்தானில் 424 மில்லியனும், சோவியத் யூனியனில் 386 மில்லியன் பேரும் இருப்பர் என்றும் அக்கணிப்பீடு கூறுகிறது.

திசையின் சிறுகதை

# பிரியம்

நல்லூர் முருகன் கோயிலில் திருவிழா ஆரம்பமாகி விட்டது. தெருக்களில் சாரி சாரியாய் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் ... இனிக் கொஞ்சக் காலத்துக்கு மாலை நேரங்களில் தெருக்களில் கலகலப்புக்குக் குறைவில்லை.

எங்களின் சிறிய ஒழுங்கையிலேயே கூட்டம் கூட்டமாய்ச் சனங்கள் ......



திருவிழா திருவிழா என்று நச்சரித்த குழந்தைகளை ஒருவிதமாய் அம்மாவுடன் கோயிலுக்குப் போகப் பண்ணியாயிற்று. தினம் தினம் கோயிலுக்குப் போய் கும்பிட்டு - குழந்தைகளுக்காகக் கடைவீதி சுற்றி -- அவர்களுக்கு ஐஸ்கிநீமும் காப்பும் விளையாட்டுச் சாமானுமென்று வாங்கி - மணலில் அமர்ந்து தெரிந்தவர்களுடன் ஊர்க்கதை அளந்து, நாட்டின் நிலைபற்றித் துக்கித்து வீடு திரும்புவதில் மனம் சலித்துப் போனது.

முன்விருந்தையில் — கையிலெடுத்துக் கொண்ட ஒரு புத்தகத்தோடு அமர்ந்து கொள்ள வருகையில் படலையடியில் யாரோ வந்து நிற்பது தெரிந்தது. உள்ளே நுழையாமல் வாசலுடன் நின்ருர்கள்.

'தேவையென்றுல் உள்ளே வரட்டும்' என்ற நினைப்போடு புத்தகத்தைத் திறந்து வாசிக்க முனைந்தேன்.

சில நிமிஷங்கள் ... மனம் புத்தகத்தில் படிய மறுத்தது.

'யாராய் இருக்கும் ?'

எழுந்து படலைக்குப் போனேன்.

'ராசம்மா அக்கா .....'

''உள்ளுக்கு வாங்கோவன் அக்கா ...... படலையோட நிண்டிட்டியள் ......''

''இல்லையடா...... பிள்ளை... நான் உதில நிக்கிறன்''

எனக்குப் புதினமாயிருந்தது. ஒழுங்கையின் தொங்கலில் பார்வையைப் பதித்தபடி ராசம்மா அக்கா .....

இந்த மனுஷிக்கு என்ன ...?

எங்கள் ஒழுங்கைக்கு முதல் ஒழுங்கையில் குடியிருக்கும் விதவைத் தாய் இந்த ராசம்மா அக்கா. ஐந்து வருஷத்துக்கு முன் தன் கணவன் செல்லத்துரையைப் பறிகொடுத்து விட்டு — இப்போது துணையாக மிஞ்சியிருக்கின்ற செல்லத்துரையின் தங்கை மகள் சுகந்தியோடு. தனது வளவிலிருந்து வருகின்ற தேங்காய் முதலான வரும்படியோடும் செல்லத்துரையால் ஆரம்பிக்கப்பட்ட சிறிய கோழிப்பண்ணை மூலம் வருகின்ற வருவாயுடனும் வாழ்க்கை நடத்தி வருகின்ருள்.

பெற்று வளர்த்த ஒரேயொரு செல்லமகள் மிக அருகில் — எமது ஒழுங்கைத் தொங்கலில் தன் கணவன் பிள்ளைகளோடு வசதியாக வாழ்ந்தும், அவளை அண்டி வாழும் பாக்கியம் இந்தத் தாய்க்குக் கிடைக்கவில்லை.

செல்லத்துரை காலமாகி ஒரு வருடம் முடிவதற்குள்ளாகவே ராசம்மா அக்காவுக்கும் மகளுக்கும் சண்டையும் பிரிவும் ஏற்பட்டுப் போயின.

இளம் வயதில் தன் எண்ணப்படி மணம் செய்து பிரிந்து போன செல்லத்துரையின் தங்கையொருத்தி நீண்டகாலத்துக்குப் பிறகு தனது கணவனை ஒரு விபத்தில் பறிகொடுத்து விட்டு, அண்ணனே தஞ்சமெனத் தனது பன்னிரண்டு வயது மகளுடன் செல்லத்துரையை நாடி வந்திருந்தாள். அவளுக்கும் அவளின் மகளுக்கும் ஆதரவு தருவது தமது கடமையென எண்ணி, முகம் கோணுமல் அவர்களையும் தனது குடும்பத்தின் அங்கத்தினராய் இணைத்துக் கொண்டனர் செல்லத்துரையும் ராசம்மா அக்காவும். அண்ணணிடம் தஞ்சமடைந்த அந்தத் தங்கையோ அவர்களிடம் வந்த மூன்றுவது வருஷமே நோயென்று பாயில் விழுந்து ஒரு சில நாட்களில் இறந்தும் போனுள். அவளது மகள் சுகந்தி ராசம்மாவுக்கும் செல்லத்துரைக்கும் இரண்டாவது மகளாகவே பின்னர் ஆகிப் போனுள். இதற்குப் பிறகு, செல்லத்துரையும் இறந்து போய்ச் சில நாட்களுள் ராசம்மா அக்காவுக்கும் அவளது மகளான பகீரதிக்கும் சிறிதாய்த் தோன்றிய சச்சரவொன்று பெரிய சண்டையாய் ஆகி, இறுதியில் ''என் வீட்டுப்படியும் மிதிக்காதே'' எனப் பெற்ற தாயிடமே அந்த மகள் சொல்லிப் போனுள்.

இவ்வளவுக்கும் நியாயமென்னவோ ராசம்மா அக்காவின் பக்கம் தான் இருந்தது. ராசம்மா அக்காவும் சுகந்தியும் குடியிருந்த சிறிய வீட்டினையும் காணியையும் தனக்கே எழுதித்தரும்படி அவளது மகள் கேட்டபோது, தனது கணவன் தனக்குவைத்துப்போன கடமை, சுகந்திக்கும் ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடித் தருவது தானென்றும் அதற்கென தன்னிடம் இருப்பது அந்த வீடும் காணியும் தானென்றும் கை நிறையச் சீதனத்தோடு மணம் புரிந்து நல்ல நிலையில் இருக்கும் மகள், இந்தக் காணியையும் கேட்பது நியாயமில்லையென்றும் சொன்ன ராசம்மா அக்காவின் நியாயம் எல்லோருக்கும் புரிந்தது. முடிவில் ராசம்மா அக்காவுக்கும் மகளுக்கும் இடையிலான பிளவு நிரந்தரமாயிற்று. மகள் வீட்டு நன்மை தீமைகளுக்குத் தாயார் செல்வதைக் கூட அந்த மகள் விரும்பவில்லை.

இப்போது, அந்த மகளின் வீடு அமைந்திருக்கிற திசையை பார்த்த படி - என்ன ஆயிற்று இந்த மனுஷிக்கு ?

உள்ளே செல்லாமல் நானும் கூடவே நின்று கொண்டேன்.

ஒரு தடவை என்னைத்திரும்பிப் பார்த்த ராசம்மாஅக்கா தொண்டையைச் செருமியபடி ஏதோ சொல்ல வாயெடுத்தாள்-குரல் கரகரத்தது.

' வேற ஒண்டுமில்லையடா இண்டைக்கு என்ர பெட்டையின்ர மூத்த மகள் - அவதான் என்ர பேத்தி, சீலை கட்டிக் கொண்டு கோயிலுக்குப் போக வெளிக்கிடுகிருள் எண்டு தவமணியின்ர மகள் வந்து சொன்ஞள் .... ''

''அவள் பாவி கோவத்தில எனக்குச் சாமத்திய வீட்டுக்கும் சொல்லாமல் விட்டிட்டாள் .... எனக்கு மனம் கேக்கேல்லையடா . என்ன தான் இருந்தாலும் நான் தூக்கி வளத்த குஞ்செல்லே... அவளைச் சீலையோட பார்க்க ஆசையாயிருந்துதெண அதுதான் உதில வந்து போகேக்குள்ள பாப்ப மெண்டு நிக்கிறன் ...''

சொல்லி முடிக்கையில் அவளையுமறியாமல் கண்களில் பொங்கிய கண்ணீர் முகத்தில் வழிந்து கொண்டிருந்தது.

தூரத்தில் நாலைந்து இளம் பெண்கள் சிரித்துப் பேசியபடி வந்து கொண்டிருந்தனர். ஆவலோடு பார்த்த ராசம்மா அக்காவோடு நானும் .....

'' அக்கா ... தெரியுதே ஆளை ...? அந்த நீலச்சீலையோட வாறவ தான் உங்கட பேத்தி சுஜி.''

''எட ...... அப்பிடியே ...... என்ர குஞ்சு இப்ப நல்ல வளத்தி...... அவர் பேரனைப் போல நல்ல உசரம்... என்ர கண்ணே பட்டிடப் போகுது''

கூட்டம் எங்களை நெருங்குகையில் பேத்தி ராசம்மா அக்காவைக் கண்டு கொண்டாள்.

வியப்பில் அந்த விழிகள் விரிந்து கொண்டன. புதிய பூவின் மலர்ச்சியால் முகம் சோபிதம் கொள்ள 'அம்மம்மா .. '' என்றபடி அவள் தயங்கி நின்ருள்.

மகிழ்ச்சித் தவிப்புடன் அவளை நெருங்கிய ராசம்மா அக்கா அவளது கைகளைப் பற்றிக் கொண்டாள்.

சிலவிஞடிகள் ஒரு கனத்த மௌனமே அங்கு நிலவியது.

பாச ஈரத்தில் தோய்ந்து கனத்த கணங்கள் .....

''கோயிலுக்குப் போறியளோ .....''

''ஓம்...... அம்மம்மா ..''

''இவைய ளெல்லாரும் உங்களின்ர சினேகிதப் பிள்ளையளோ... ''

''ஓம்''

''அம்மா கோயிலுக்கு வரேல்லையே... ?''

' இல்லை அவ நாளைக்கு வருவாவாம்''

தன்மடியிலிருந்து எதையோ அவிழ்த்து அவளது கையுள் அழுத்தியபடி ''ஏதும் வாங்குங்கோ... '' என்ருள் ராசம்மா அக்கா.

மறுக்க முடியாமல் சிரித்தபடி அதை ஏற்றுக் கொண்டாள் அந்தச் சின்னப் பெண்.

''அப்ப போட்டு வாங்கோடா கவனமாய்'' என்ற படி அவளது கைகளில் முத்தமிட்டுத் தன் பேத்திக்கு விடை தந்தாள் அவள்.

தான் சுமந்து சீராட்டி வளர்த்த குழந்தை ஒரு பெண்ணய் வளர்ந்து, நடந்து போகும் அழகைப் பார்த்து நின்றுவிட்டு, எதுவும் பேச இயலாமல் தலையசைத்து விட்டு நடக்கத் தொடங்கினுள்.

கனத்த மனசுடன் நானும் உள்ளே நடந்தேன். □

ந சத்தியபாலன்

# 1990ஆம் ஆண்டில் உலகெங்கும் செகாவின் 130ஆவது பிறந்தநாள் விழா

மாபெரும் ரஷ்ய ஆசிரியர் அன்ரன் செகாவின் 130ஆவது பிறந்த நாள் விழா, உலகெங்கும் கொண்டாடப்பெறும்; இந்த ஆண்டைச் ''செகாவ் ஆண்டு'' என்று யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

செகாவ் ஆண்டையொட்டி, மொஸ்கோவில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெறும்; இதில் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், கனடா. பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, யூகோஸ்லாவியா, ஹங்கேரி. சோவியத் யூனியன் மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், திரைப்பட இயக்குநர்களும், நடிகர்களும், கலைவிமர்சகர்களும், செகாவின் படைப்பு பற்றிய ஆய்வாளர்களும் பங்கேற்பர்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் செகாவ் விழாவில் பங்கேற்குமாறு, மொஸ்கோவிலுள்ள மாலி தியேட்டர் அழைக்கப் பெற்றுள்ளது.

மொஸ்கோவில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில், உலக இலக்கியம். நாடகம் திரைப்படம் ஆகியவற்றின் மீது செகாவின் செல்வாக்கு குறித்து விவாதிக்கப்படும். செகாவ் தமது இறுதி ஆண்டுகளைக் கழித்த கிருமியாவில், ஏப்ரில் மாதம் விழா நடைபெறும்

மே மாதத்தில், செகாவ் பிறந்த நகரமான தகன்ராக்கில், விழா நடைபெறும். இலையுதிர் காலத்தின்போது, சகாலின் தீவில், செகாவ் ஆண்டு விழா முடிவடையும். செகாவின் நாடகங்களைச் சோவியத் ரேடியோவும், டெலிவிஷனும், அஞ்சல் செய்யும். செகாவின் டயரிகள், செகாவ் பற்றிய ஆய்வுரைகள், மாநாட்டு ஆவணங்கள் ஆகியவற்றை சோவியத் விஞ்ஞானக் கழகத்தின் 'செகாவ் குழு' பிரசுரிக்கும்.

## தவளைகளின் வெற்றி

மேற்கு ஜெர்மனியில் நடந்த விஞேதமான வழக்கு இது! ஒரு குட்டையில் தவளைகள் ஏழு கட்டை சுருதியில் காதைப் பிளக்க வைத்துக் கொண்டிருந்தன.

அருகில் ஒரு வீட்டில் வசித்து வந்த இளம் தம்பதியினருக்கு இந்தக் காட்டுக் கத்தல் இம்சையாகவும், தூக்கத்துக்கு இடையூறாகவும் இருந்தது. உடனே தவளைகள்மீது வழக்குப் போட்டு விட்டார்கள்.

தம்பதியினருக்குக் கீழ்க் கோர்ட்டு சாதகமான தீர்ப்பை வழங்கிஞலும், தவளைகள் சார்பில் மேல் கோர்ட்டுக்குப் பிராணி மித்திரர்கள் போஞர்கள்.

அங்கே நீதிபதிகள், தவளைகளின் இயற்கை நிபதி இது. இதற்காக அவற்றை அழிப்பது கூடாது. இதைப் பெரிய பாதிப்பாகக் கருதுவதற்கில்லை' என்று கூறிவிட்டனர்.

வழக்கில் வெற்றி பெற்ற தவளைகள் கோஷ்டி அமர்க்களமாகத் தொடர்ந்து கச்சேரி நடத்திக் கொண்டிருக்கிறது !

நன்றி : கல்கி

# சாதிப் பாகுபாடுகள்

## புதிய வடிவில் தலைநீட்டுகின்றன

**சிந்தனை மேடை — 3**

**சாதி அமைப்புத் தகர்ந்து வருகிறதா?**

இரா. செழியன்

மனிதன் ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை சிந்தனை செயற்பட்டு உறவுகளில், பல்வேறு மாறுதலை உள்வாங்கிக் கொண்டதுடன் அடுத்துவரும் பரம்பரைக்கும் தான் பெற்ற மாற்றங்களை பகிர்ந்து கொண்டும் வந்துள்ளான். இவ்வாறே சாதி முறையும் தோற்றம் பெற்றது. இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில சாதியமைப்பு சம்பந்தமாக காலத்துக்குக்காலம் பல மாறுதல்களை அடையாளம் கண்டபோதும், அதன் செல்வாக்கு இன்றுவரை தன் வலுவான தன்மையினைப் பேணிய வண்ணமே உள்ளது எனலாம்.

### பின்னணி

வர்க்க அடிப்படையில் இதனை நோக்கின் கீழ் மட்டத்தில் உள்ள குறிப்பிட்ட சாதியமைப்பினர், தம்மை பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்தும்போது மேல் மட்டத்திலுள்ளவர்களின் நிலைக்கு மாற வாய்ப்பு உள்ளபோதும், குறிப்பாக அவர்கள் பொருளாதார ரீதியில் வளர்ந்த போதிலும் கூட ''பிறப்புரிமை'' வாயிலாக சாதியமைப்பு என்ற கட்டுக் கோப்பில் இருந்து விடுபட்டு வெளியேற முடியாத ஒரு சூழ்நிலையைத் தெளிவாகக் காணமுடிகின்றது. இந்நிலைமை தொடர்ந்தும் சாதியமைப்பினைப் பேணிவருகின்றது. யாழ்ப்பாண சாதியமைப்பினை நோக்கும் போது பொதுவாகப் பிராமணர்கள் அல்லாத உயர் சாதியினராகிய வேளாளர் மரபினர் மற்றும் செட்டிமரபினர், பள்ளர், பறையர், முக்குவர், வண்ணார், கைக்குளர், தச்சர், கொல்லர், தட்டார், போன்ற சாதியினராக வரையறை செய்யப்பட்டவர்கள் வாழ்வதனைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் வேளாளர் தம்மை உயர் சாதியினராக கருதிக் கொள்வதுடன் ஏனைய படிமுறைகளிலுள்ளவர்களை தொடர்ந்தும் தமக்குக் கீழ்ப்பட்டவர்களாக நடத்துவதனையும் காணலாம். எனவே யாழ்ப்பாணத் தேச வழமைச் சட்டங்களும் சம்பிரதாயங்களும் வேளாளரைப் பாதுகாத்தேவருகின்றது எனலாம். ஏனைய மாவட்டங்களில் குறைந்த சாதியினரை உயர் சாதியினர்வழிநடத்தும் முறையில் அதன் தாக்கம், ஒப்பீட்டளவில் யாழ்ப்பாணத்தை விடக் குறைவாகவே உள்ளது.

யாழ் பிரதேசத்தில் 1950 கட்கு முன், குறைந்த சாதியினர் என வரையறுக்கப்பட்டோர் பஸ்சில் பிரயாணம் செய்யும் போது கூட, சமமாக உயர் சாதியினருடன் ஆசனங்களில் அமர முடியவில்லை. இதனால் இவர்கள் வாகனத்தின் கீழ்த்தளங்களில் இருந்தே பிரயாணம் செய்தனர். பாடசாலைகளிலும் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்கள் ஏனைய உயர் சாதி மாணவர்கள் போல் கதிரைகளில் இருக்க அனுமதிக்கப்படவில்லை; எனவே இவர்கள் நிலத்தில் இருந்தே தம் கல்வியைத் தொடர்ந்தனர்.

ஈழத்திலே சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்ட நாவலர் கூட, தேசவழமை சக்திகட்கு உட்பட்டு சாதி வெறியைக் காட்டி தமிழ் மக்களில் ஒருசாராரின் கல்வியுரிமையை மறுத்துள்ளமையைக் காணலாம். அவர் எழுதியுள்ள சைவ வினா விடைகளில் சாதி வேறுபாடுகள் வெளிப்படையாக காணப்படுகின்றன அவரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளிலும் கல்வியுரிமை தமிழ் மக்களில் ஒரு சாராருக்கு மறுக்கப்பட்டது. இளமை தொட்டு மரணம் வரை கல்விகற்க வேண்டும் எனக் கூறிய இவரே, ஒரு சாராரின் கல்விக்கு வாய்ப்பூட்டுப் போட்டுள்ளதனைக் காணலாம். எனவே சைவப் பாடசாலைகளில் இவர்கள் கல்வி கற்க அனுமதிக்கப்படாமையால், கத்தோலிக்க மதநிறுவனங்கள் இவர்கட்கு ஆதரவளிக்க முன் வந்தமை, இப்பிரிவினரைப் பொறுத்து ஒரு வரப்பிரசாதமாய் அமைந்தது.

தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் மேற்சட்டை அணிவது கூட தடைசெய்யப்பட்டிருந்தது. இன்றும் கூட யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் குறிப்பாக புங்குடுதீவு, காரைநகர் போன்றவற்றில் தாழ்த்தப்பட்ட சாதியினர் குடிதண்ணீரைக் கூட உயர் சாதியினர் பாவிக்கும் கிணறுகளில் அள்ள முடியாத நிலை, காணப்படுகின்றது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட மக்கள் வீட்டுத் திண்ணைகளில் வைத்து வரவேற்கப்படுவதும் சிரட்டையில் தண்ணீர் கொடுப்பதும் அல்லது தண்ணீரை அவர்களின் கைகளில் ஊற்றுவதும் இன்றும் இடம் பெற்று வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஒரு உயர் சாதி இளைஞன் தாழ்ந்த சாதிப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து, தன் சமூகக் கட்டுப்பாடுகளைக் கடந்து சென்று வாழ்ந்தாலும் கூட, அவருக்கு மணமாகாத சகோதரிகள் இருப்பின் அவர்களைத் திருமணம் செய்ய இத்தாழ்த்தப்பட்ட வர்க்கத்தில் இருந்து யாராவது முன்வந்தால் ஒழிய, உயர் சாதியினர் எனத் தம்மைக் காட்டிக் கொள்ளும் எவரும் இதற்கு முன்வரமாட்டார்கள். எனவே தான் சாதியடிப்படையில் பாதிக்கப்பட்டு யாழ் சமூக அமைப்பில் திருமணம் செய்வோர், தம்பெற்றோரையும் உற்றோரையும் பிரிந்து வாழ்வதுடன், இக்கலப்புத் திருமணங்கள் பல புதிய சமூகப் பிரிவினரையும் தோற்றுவிக்கின்றது.

### பொருளாதார ரீதியான தாக்கம்

யாழ்ப்பாணப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களின் வசிபபிடங்கள், ஏனைய உயர் சாதியினரின் வசிப்பிடங்களில் இருந்து புறம்போக்காகவே அமைந்துள்ளதனைக்காணலாம் குறிப்பாக வளமற்ற சுண்ணக்கல் நிறைந்த தாழ் நிலங்கள், செழிப்பற்ற உவர் நிலங்கள் என்பன. அத்துடன் இவர்களின் உழைப்புக்கூட ஒருபருவகாலவருமானமாகவே இருந்து வருகின்றது.

இவ்வருமானத் தளம்பல் அம்மக்களை அப்பிரதேச உயர் சாதியினரிடம் தங்கி நிற்க வேண்டிய சூழ்நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இவற்றுடன் இவ் உயர் சாதியினர் தம் பகுதிகளில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை பொருளாதார ரீதியில் மட்டுப்படுத்த 'கூத்தாடுதலை' மிக இலகுவான ஒரு வழி முறையாக கைக்கொண்டும் வருகின்றனர். இது இவர்களின் சிந்தனையை திசை மாற்றி அக்கூத்திலே கவனம் செலுத்தியதுடன் பொருளாதார ரீதியிலும் பின் தள்ளியது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த பொருளாதார வளமான 7.7 மில்லியன் பனைகளில் இன்று 2%மே பயன்படுத்தப் படுகின்றமைக்கு, இங்கு காணப்படும் சமூக அமைப்பே முக்கிய காரணமாகும். கள் சீவாத சாதியில் உள்ளவர்கள் சீவல் தொழிலை செய்ய தயங்கியமையும், கள் சீவும் சமூகத்திலுள்ள இளம் சந்ததியினர் இத்தொழிலில் இருந்து ஒதுங்கி வேறு தொழில்களை தேடியமையுமே இந்நிலைமைக்கு காரணமாகும். தாழ்த்தப்பட்டோர் எனக் கருதப்படுவோர் தப்பபிப்பிராயமுள்ள ஏனைய சமூகத்தினருக்கு, தம் சாதியை இனம் காட்டவிரும்புவதில்லை. ஆனால் சீவல் தொழில், மீன்பிடித்தல், உடை கழுவுதல், முடிவெட்டுதல் போன்ற தொழில்கள் அவர்களை இனம் காட்டுகின்றன.

இம்மக்கள் இத்தொழில் அடிப்படையில் அந்தஸ்து ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் கல்வியிலும் சமூகத்தின் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, ஏனைய தொழில்களை விட இத்தொழில்களில் வேலைவாய்ப்பும் தேவையும் அதிகமாக இருந்தபோதிலும், சமூக அந்தஸ்து காரணமாக ஏனைய சமூகத்தினர் இவற்றினைச் செய்ய முன்வரவில்லை. சீவல் தொழிலைச் செய்யும் சமூகத்தவர்கட்கு பொது இடங்களில் அவர்களின் மனித உரிமைகள் மறுக்கப்பட்டமையால், அவர்கள் வேறு தொழில்களைத் தேடும் இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். எனவே பனம் பொருள் உற்பத்தியை யாழ்ப்பாணத்தில் விருத்தி செய்ய முடியாதிருப்பதற்கு, யாழ்ப்பாணத்தில் காணப்படும் இச் சாதி வேறுபாடுகளே காரணமாகின்றன. இங்குள்ள உயர் சாதியினர் இவ் உற்பத்திகளை இரகசியமாக நுகர்கின்றபோதிலும் இத்தொழிலை தரமுயர்த்துவதில் எவ்வகையிலும் பங்கு கொள்ளவில்லை. இத்தொழிலுக்கு வேண்டிய உடற்பலம், நுட்பத்திறமை என்பவற்றினை இயல்பாகக் கொண்டிருக்கும் ஒரு குழுவினருக்கு சமூகத்தில் உரிய அங்கீகாரம் வழங்கப்படாமையால், இதன் பொருளாதார முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. எனவே சீவல் தொழிலின் இழிநிலை காரணமாக, பணவசதி படைத்தோர் இதில் ஈடுபடவில்லை. இது அவர்களின் மூலதனத் திரட்டலுக்கு இடமளித்து முதலாளி வர்க்கத்தின் பலத்தை மேலோங்கச் செய்வதிலும் பங்குவகிக்கவில்லை. ஆனால் சிங்கள மக்களிடையே முதலாளி வர்க்கத்தின் எழுச்சி சாராயம் வடித்தல், விற்பனை உரிமை என்பன மூலமே ஏற்பட்டது. இவ்வாய்ப்பு தமிழர்கட்கு பனை மூலம் இருந்த போதும் இதனைத் தவறவிட்டனர். எனவே முதலாளி வர்க்கத்தின் முக்கிய மார்க்கம் புறக்கணிக்கப்பட, அவர்களின் வழி ஏற்பட்டிருக்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தியும் தமிழர்களைப் பொறுத்து இழக்கப்பட்டதனைக் காணலாம்.

### தீர்வுகள்

எனவே தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் அடிப்படை மாறுதல்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு கல்விசார்பாக அவர்கள் வழி நடத்தப்படவேண்டும். அத்துடன் இச்சமூகப் பெண்களுக்கு கூடுதலாக சமூகம் பற்றிய அறிவு ஊட்டப்பட்டு, சிறுவயதிலே திருமணம் முடித்து அதிக குழந்தைகளைப் பெறுவது போன்றவை மட்டுப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இவர்கள் பெறும் வருமானத்தையும் திட்டமிட்ட வகையில் செலவிடக் சற்றுக் கொடுத்தல் வேண்டும். இவர்கள் தொடர்ந்தும் தாழ்த்தப்பட்ட சமூகம் என்ற ஒரு குறுகிய வட்டத்தினுள் நில்லாது, இச்சமூகத்திலிருந்தே இவர்களை வழி நடத்தக் கூடிய வகையில் இளைஞர்கள் முன் வரவேண்டும்.

எனினும் தென்னாசியாவிலே கல்வியில் வளர்ச்சி பெற்ற யாழ்ப்பாணத்தில், மனித நேயத்தினை மதிக்காத மனிதர்கள் வாழும் வரை, சாதியமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்த முனைவது ஒரு துயரப் பிரசவமாகவே அமையும் எனலாம். □

---

# இளவட்டம்

### தேடல்

காற்றுக்கு உருவம் இல்லை;
உணர்வு உண்டு.
அதன் உணர்வில்தான்
நீ —
உயிர் வாழ்கிறாய்.
ஒப்புவமையற்றவன்
கடவுள்;
கடவுளைத்தேடி அலையாதே!
உன் —
ஆத்மாவில் அவன்
கலந்திருப்பதால்
அவனில நீ
தேடல் காணாதே;
உன்னில் நீயே
தேடல் காணு
கடவுளைக்
காண்பாய் நீ!

— வெளிமடை ஜஹாங்கீர் □

### காலங்கள்

கடந்த காலங்கள்
கழிந்து விட்டன
அவை —
நடந்து விட்டன;
நடாத்தி முடிக்கப்பட்டன.

நடந்து விட்டதை
எண்ணி
எண்ணி......
நடக்கின்ற
இந்தக் காலத்தையும்
இழந்து விடப் போகின்......

இல்லை
வெகுதூரத்தில்
நிகழ்காலம் எமைவிட்டு
நீங்கிக் கொண்டிருக்கிறது.

இனியென்ன —
எம்மிடம் இருப்பதெல்லாம்
எதிர்காலம் ஒன்றுதான்.

இதையும்
கடந்த காலங்களாக,
நிகழ் காலங்களாக,
நிகழ்த்தி விட்டால்
நிகழ்ந்தவற்றை
எண்ணிப் பார்க்கக் கூட
என்ன எஞ்சப் போகிறது?

— சாவ. சண்முகதாசன் □

### அன்பு

அன்பு அழகுடன்
இணையும் போது
அது
ஆராதிக்கப் படுகின்றது.
ஆனால் .........
அழகு அன்பை
விலைபேசும் போது
பண்பும் பாதை மாறுகின்றது

— பூண்டுலோயா
க. காந்தருபன் □

# ஜம்மு காஷ்மீர் பிரச்சினை

## உருளும் உலகில்

இன்று ஜம்மு காஷ்மீர் பிரச்சினை இந்திய ஆட்சியாளருக்குப் பெரும் தலையிடியைக் கொடுக்கும் பிரச்சினையாக மாறியுள்ளது. எவ்வாறு இன்று இலங்கையில் தமிழீழப் பிரச்சினை இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் பலவித அரசியல், ராஜதந்திர ரீதியான நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறதோ அவ்வாறே ஜம்மு காஷ்மீர் பிரச்சினை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பலவித அரசியல் ரீதியான தலையிடிகளுக்கும் முறுகல்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது.



பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் இருந்த ஒரு மன்னராட்சி அரசே காஷ்மீராகும். 90% முஸ்லிம்களையும் 10% இந்துக்களையும் கொண்ட இவ்வரசு, தனது மன்னனை ஒரு இந்துவையே பரம்பரையாகக் கொண்டிருந்தது. பாகிஸ்தான் எல்லைக்கும் இந்திய எல்லைக்கும் இடையில் இருந்த காஷ்மீர் எந்த நாட்டின் பக்கம் சேர்வதென்ற பிரச்சினைக்குரிய இடத்தில் இருந்தது. இந்தியாவில் நிகழ்ந்த இந்து — முஸ்லிம் கலவரத்தின் பின்னர், முஸ்லிம்களே காஷ்மீரின் பெரும்பான்மையினர் என்ற ரீதியில் பாகிஸ்தான் பக்கம் சேரும் வாய்ப்புகள் அதிகமாய் இருந்தன. அதே நேரத்தில், இந்த நாட்டின் மன்னன் ஓர் இந்து என்ற முறையில் இந்தியாவின் பக்கம் சாரும் வாய்ப்பும் அதிகமாய் இருந்தது.

பாகிஸ்தான் காஷ்மீரைத் தனது பக்கம் சேர்த்துக் கொள்ள முயன்றதன் எதிர் விளைவாக, 1947 ஒக்ரோபர் 25 இல் (இப்பிரச்சினை பற்றிய விரிவான விளக்கத்தை திசை - இல் பார்க்கவும்) இந்தியா, காஷ்மீரை அதன் ஆட்சியாளரின் ஆதரவைக் காரணம் காட்டித் தன்னோடு இணைத்துக் கொண்டது.

இன்று இதன் காரணமாகவே ஜம்மு காஷ்மீர் பிரச்சினை தோன்றியுள்ளது. இந்தியா— பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் ஆதிக்கத்திலிருந்தும் விடுபட்டு நிற்கும் ஓர் சுதந்திர காஷ்மீர் அரசை நிறுவும் போக்கும், அதற்குரிய போராட்டமும், இன்று அங்கே தோன்றியுள்ளன.

எப்படி இலங்கையில் தமிழீழம் கோரி அகிம்சை ரீதியாகவும், அதன்பின் ஆயுதம் ஏந்திய போராட்டங்களும் ஏற்பட்டனவோ, அவ்வாறே இன்று ஜம்மு காஷ்மீர் பிரச்சினையும் மாறியுள்ளது. அதே நேரத்தில், எப்படி அகிம்சை ரீதியாகப் போராடியவர்களுக்கும் ஆயுதம் ஏந்தியவர்களுக்கும் இந்தியாவே மறைமுக/நேரடிக் காரணியாக இருந்ததோ, அவ்வாறே இன்றைய ஜம்மு காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் உள்ளது.

சுதந்திர காஷ்மீர் போராட்டம் பாகிஸ்தான் ஆதரவோடு தான் ஆரம்பிக்கப்பட்டது. ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி என்ற தீவிரவாத — ஆயுதப்போராட்ட அமைப்பின் ஸ்தாபகர் மக்பூல் பட் ஆவர். இவர் 1974 இல் கொல்லப்பட்டதன்பின்னர் அமனுல்லாகான், ஹாஷிம் குரேஷி போன்ற தீவிரவாதிகளின் பெயர்கள் தெரியவந்தன. இவர்களில் பின்னவர் ஒல்லாந்தில் இருந்தே இயங்குகிறார். முன்னவர் லண்டனிலிருந்து நாடுகடத்தப்பட்டு தற்போது ராவல்பிண்டியில் வசிக்கிறார். இவர்களுக்கள்ளும்போராட்ட முறைகளில் வேற்றுமைஉண்டு. ஆனால் இன்றைய முக்கிய தலைவராகவும் ஜம்மு காஷ்மீர் விடுதலை அமைப்பின் முக்கிய கோட்பாட்டாளராகவும் கருதப்படுபவர் அஸாம்இன்குலாபி ஆவார். இதேவேளை, வன்முறையில் நம்பிக்கை வைக்காத ஷாபிர்ஷா என்பவரைத் தலை

□□ சிவா □□

வராகக் கொண்ட, 'மக்கள் அணி' என்னும் இயக்கமும் இயங்கிவந்தது. ஆனால் ஷாபிர்ஷா காஷ்மீரின் சுதந்திரத்தை பாகிஸ்தானுடன் இணைந்த ஒன்றாகப் பார்த்ததே, இவரது மக்கள் அணிக்கும், ஏனைய தீவிரவாத அமைப்புகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடாகும். இவர் தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பதற்கு, தீவிரவாத ஆயுத அமைப்புகளே காரணமெனச் சந்தேகம் உண்டு.

சுதந்திர காஷ்மீருக்கான வன்முறைப்போராட்டம் 1988 ஜூலையிலேயே களைகட்ட ஆரம்பித்தது. சிறீநகர் தொலைபேசித் தொடர்பு நிலையத்தை தகர்த்ததே இதன் தொடக்கமாகும். இதன் பின்னர், செப்ரெம்பரில் சில தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஏ. கே. றைபிள்கள், சீனக் கைத் துப்பாக்கிகள் வெடிகுண்டுகள் புழக்கத்துக்கு வந்தன. இளைஞர்கள், வேலையற்றவர்கள் போராட்டத்துக்கு திரட்டப்பட்டனர். பாகிஸ்தான் எல்லைக்குள் இவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

இன்று இவர்களின் போராட்டம் கட்டுக்கடங்கா நிலைக்குப் போவதற்குக் காரணம், தற்போது ஆட்சியில் இருக்கும் முதல்வர் பாரூக் அப்துல்லா வின் கூட்டணி அரசாங்கமே. இவ்வரசாங்கத்தின் அரசியல்வாதிகளின் பார்வை விசாலமின்மையும், பழைய தேர்தல் தொகுதி முறைகளை முன்வைத்து இயங்கும் பத்தாம் பசலிப் போக்குமே, இன்றைய காஷ்மீர் பிரச்சினையை பெரிதும் தூண்டியுள்ளன. □

# இஸ்ரேலியருடன்

## நேரடியாகத் தொடர்புகொள்ள விரும்பும்

# பலஸ்தீனியர்கள்

சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள விரக்தியினால் உந்தப்பட்டுள்ள, இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் பகுதியில் வாழும் பலஸ்தீன மக்கள், இஸ்ரேலியருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

"இஸ்ரேலில் தான் முடிவு எடுக்கப்பட வேண்டிய நிலையில், நாம் அமெரிக்கா நிலைப்பாட்டில் நீண்ட நாட்களாக அக்கறை கொண்டிருந்திருக்கிறோம்'' என, கொம்யூனிஸ்ட் புத்திஜீவியான ஹஸான் அல் கட்டிப் கூறினார். இவர் புதிய தலைமுறையைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவராவர்.

இஸ்ரேலியருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு தேசியவாதத் தலைவர் பைஸால் ஹுஸேனி விடுத்துள்ள அழைப்புக்கு இணங்க, இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் வாழும் பலஸ்தீனர்கள், பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இஸ்ரேலிய வாக்காளர்களை இணங்கச் செய்யத் தாம் விரும்புவதாகக் கூறுகின்றனர்.

ஏற்கெனவே தமது நிலைப்பாட்டை ஆதரிப்பவர்களையும் இஸ்ரேலிய இடதுசாரிகளுக்கு அப்பாலுள்ளவர்களையும் தொடர்பு கொள்வதற்கு இவர்கள் புதிய வழிகளை நாடுகின்றனர்.

ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள மேற்குக் கரைப்பகுதிக்குள்ளும், காஸாப் பகுதிக்குள்ளும் செல்லவோ வெளியறவோ தடைவிதிக்கப்பட்டுள்ள ஹுஸேனி கடந்த வாரம், தனிப்பட்ட ஒரு பலஸ்தீனியன் கடந்த ஜூன் மாதம் மேற்கொண்ட இஸ்ரேலிய பஸ் மீதான தாக்குதலில் — இதில் 16 யூதர்கள் இறந்தனர் — காயமுற்றுப் படுத்த படுக்கையாக ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு இஸ்ரேலியரைச் சென்று பார்வையிட்டார்.

'இப்பொழுதே சமாதானம்' என்ற சுலோகத்தை முன்வைத்துள்ள இடதுசாரி இயக்கத்தின் கூட்டங்களிலும், ஹுஸேனி உரையாற்றியுள்ளார். அத்துடன், மேற்குக் கரையோரப் பகுதியில் குடியேறியுள்ள பிரபலமான ஒரு யூத 'றபி' யுடனும் ஹுஸேனி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கெய்ரோவில் இஸ்ரேலிய பலஸ்தீனியப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு அமெரிக்கா திட்டமிட்டிருந்த போதிலும், பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேசுவதற்கு இஸ்ரேல் மறுத்து வருவது அமெரிக்கத் திட்டத்திற்குப் பெரும் தடையாக உள்ளது. எனினும் இஸ்ரேலில் நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்புகளில், பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்குக் கூடுதலான ஆதரவு இருப்பதைக் கண்டு, பலஸ்தீனியர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

"இந்த வாக்கெடுப்புக்களில் 50 வீத மக்கள் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேசுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். மற்ற 50 வீதத்தினரைத்தான் நாம் வென்றெடுக்க முயல வேண்டும். இவர்களில் 15—20 வீதத்தினரை எமது பக்கம் வென்றெடுத்தால், அது எமக்கு வெற்றி'' என, மாடி அப்துல் ஹாதி கூறுகிறார். இவர் பலஸ்தீனிய வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பதில் பங்காற்றும், பாஸியா என்ற நிறுவனத்தின் தலைவராவார்.

25 மாதங்களாகக் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வீறு பெற்றுள்ள பலஸ்தீனியர்கள், தாம் இப்பொழுது இஸ்ரேலியரின் கவலைகளையும் அச்சங்களையும் புரிந்து கொள் கூடிய நிலையிலிருப்பதாகக் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் இஸ்ரேலியரின் அச்சங்களைப் போக்குவதற்குத் தாம் தவறிவிட்டமை வலதுசாரி இஸ்ரேலியர் சந்தேகத்தை வளர்ப்பதற்குத் துணையாகியது என்பதை, இப்பலஸ்தீனியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

"சாதாரண இஸ்ரேலிய மக்களின் சந்தேகங்களையும் அச்சங்களையும் பயன்படுத்தி, வலதுசாரிகள் சமாதானத்தை நாடுபவர்களின் தொகையை அதிகரிக்கவிடாது மட்டுப்படுத்தியுள்ளனர்'' என, ஸயாட் குறிப்பிடுகிறார். இவர் பலஸ்தீனியர் ஹீப்று மொழியில் நடத்தும் பத்திரிகையின் ஆசிரியர். இவர் நீண்டகாலமாக பலஸ்தீனியரும் இஸ்ரேலியரும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டுமென, வற்புறுத்தி வருபவர். ப. வி. இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென, எவ்வளவோ இஸ்ரேலியர்கள் விரும்பிய போதும், பயத்தினாலும் சந்தேகங்களினாலும் மௌனம் சாதிக்கின்றனர் என அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

சிரேஷ்ட இஸ்ரேலிய பத்திரிகையாளர் டானி றுபின்ஸ்ரைன் இன்றைய நிலையைப் பின்வருமாறு வர்ணிக்கின்றார். "ஆக்கிரமித்துள்ள பகுதிகளை இஸ்ரேல் தொடர்ந்தும் ஆள முடியாதென, பெரும்பாலான இஸ்ரேலியர்கள் கருதுகின்றனர். ஆனால், அப்பகுதிகள் குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதில் தான், கருத்து வேறுபாடு நிலவுகிறது''.

— ராய்ட்டர் □

## ஜம்மு காஷ்மீரும் ராஜீவும்

காஷ்மீர் பிரச்சினையில் ராஜீவின்போக்கு எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்துவிடுகிறமாதிரி அமைந்துள்ளது. அவர் ஒரே நேரத்தில் இரண்டு விதமான வேஷங்கள் போடுகிறார் என்று கூறப்படுகிறது. காஷ்மீர் பிரச்சினையை வி. பி. சிங் மோசமாக்கி விட்டார் என்றும், அது சம்பந்தமாக தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்த அவர் அண்மையில் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, பாகிஸ்தான் இந்த விஷயத்தில் ஸ்திரமான ஒருபோக்கை எடுக்கவேண்டும் என்றும் பாகிஸ்தானை உஷார்படுத்திக் கருத்துத் தெரிவித்தார். இவரது இந்தச் செயல், தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடுவதுபோல் அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

## தொழிற்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்க உறுப்பினர்களை அரசியல் மயமாக்குதல்; அரசியல் வகுப்புகளையும் விரிவுரைகளையும் நடத்துதல்; அரசியல் ரீதியில் மிகவும் வளர்ந்த தொழிலாளர்களை தொழிற்சாலைக் குழுக்களில் அல்லது சிறு குழுக்களில் ஸ்தாபனரீதியாகச் சேர்த்தல்; அவர்களைப் புரட்சிகரக் கட்சி ஒன்றில் சேர்த்தல்; புரட்சி என்ற நோக்கத்தை தொழிலாளர் முன்னிலையில் எப்பொழுதும் வைத்திருத்தல்; புரட்சியின் வெற்றிக்காக ரகசியத் தயாரிப்புச் செய்தல்— இவையாகும்.

முன்னர் தொழிற்சாலைகளில் கட்சிக் குழுக்களும் சிறு குழுக்களும் அமைக்கப்பட்டன. இப்பொழுது பிரதேச ரீதியான குழுக்கள், அல்லது சிறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. தொழிற்சாலைக் குழுக்கள் இருக்கும் இடங்களிற்கூட அவை பொருளாதாரப் போராட்டங்களைப் பற்றி விவாதிக்கும் கருத்தரங்குகள் ஆகின்றன; அரசியல் (அதாவது நாடாளுமன்ற அரசியல்) பிரதேசரீதியான குழுவினூற் கையாளப்படுகின்றது. அழுத்தம் வர்க்கப் போராட்டத்திலிருந்து நாடாளுமன்றப் போராட்டத்திற்கு மாறியுள்ளதையே, இது காட்டுகின்றது. தொழிலாளி ஒரு தேர்தலின் வாக்காளனுகவே கருதப்படுகிறுன்; ஒரு புரட்சியின் போராளியாக அல்ல

### சந்தா கழித்தல் தீய பழக்கம்

தொழிலாளியின் சம்பளம் அவனது கைக்குப் போகுமுன்னரே தொழிற்சங்க சந்தாவைக் கழிக்கும் முறை தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட இன்னொரு தீய பழக்கமாகும். இதனுல் சீர்திருத்தவாதம் ஊக்குவிக்கப்படுகிறது. தொழிற்சங்க இயக்கம் முதலாளித்துவத்தின் திசையிற் திருப்பப்படுகின்றது, முதலாளித்துவ அரசியல் நடைமுறை வழக்காகின்றது. 1970இல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததற்குப் பின்னர், இது உத்தியோகபூர்வமான கொள்கை ஆகியுள்ளது. இது முதலாளிகளைப் பொறுத்தவரை ஒரு கெட்டித்தனமான நடவடிக்கையாகும். இதனுல் முதலாளிக்கு தொழிற்சங்கத்திற் சேர்ந்த அனைவரையும் யாரெனத் தெரியவருகின்றது' அத்துடன் தொழிற் சங்கத் தலைவர்களையும் கட்டிப் போடுகிறது. இன்றைய தொழிற்சங்க அதிகாரிகள், மிகச் சொற்ப தொகையுடன் கஷ்டப்பட்ட முந்திய கால தொழிற்சங்கத் தலைவர்களுடன் ஒப்பிடும்போது, மிக உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை உடையவராய் இருக்கிறுர்கள். இதற்குக் காரணம், முதலாளிகள் சந்தாவைக் கழித்துத் தொழிற்சங்கங்களுக்கு அனுப்புவதாகும். இப்பொழுது தொழிற்சங்கத்தலைவர் முதலாளியையும், அவருடைய சட்டங்கள், விதிகளையும் மீறமுடியாது. தொழிற்சங்கம் இசைவாக இயங்காவிட்டால் சம்பளம் கழிக்கப்படுவது நிறுத்தப்படுமென, முதலாளி எப்பொழுதும் அச்சுறுத்துகின்றார். தொழிற்சங்க அதிகாரி இதனை ஒருபோதும் விரும்பமாட்டார். ஏனென்றுல் முதலாளியிடமிருந்து சந்தாக் காசோலைகள் வராவிட்டால் இவருடைய உயர்ந்த வாழ்க்கைத்தரம் மறைந்து விடும், முன்னரிலும் பார்க்க வேலை நிறுத்தல்கள் குறைந்ததற்கு இதுதான் பிரதான காரணம்.

### தலைவர்கள் அந்நியப்படல்

இந்தத் தீய பழக்கத்தினுல் தலைவர்கள் தொழிலாளரிடமிருந்து தனிமைப்படுத்தப்படுகிறுர்கள். முன்னர் தொழிலாளரிடம் தனியத் தனியச் சென்று சந்தாப் பணம் சேர்த்தபோது, தலைவர்கள் சாதாரண உறுப்பினருடன் தொடர்பு வைத்திருந்தார்கள். தொழிலாளியின் பிரச்சினை அல்லது அவருடைய வேலைத் தளத்திலுள்ள பிரச்சினை தலைவர்களாற் திருப்திகரமான முறையில் கவனிக்கப்படாவிட்டால், தொழிலாளி சந்தா கொடுப்பதை மறுக்க முடியும். இந்தத் தொடர்பு நேரடியானது. சந்தா கொடுப்பதில்லையென்று அச்சுறுத்தித் தொழிலாளர், தலைவர்கள்மீது அழுக்கத்தைத் திணிக்கமுடியும். தலைவர்களும் சந்தாவை இழந்து விடுவோமென்ற அச்சத்தில், உறுப்பினர்களின் தேவைகளைக் கவனிக்கவேண்டி ஏற்படுகின்றது, இன்று முதலாளி காசோலை மூலம் தொழிற்சங்கத்திற்கு சந்தாப் பணத்தை அனுப்புகின்றபடியால், தொழிலாளி தலைவர்கள்மீது அழுக்கத்தைத் திணிக்கும் ஒரு வழி முறையை இழந்துள்ளார். இன்று நாட்டிலுள்ள முழுத் தொழிற்சங்க இயக்கமும் இதில் மூழ்கியிருக்கின்றது. நாம் இதிலிருந்து மீள்வோமா என்பது சந்தேகம். பிரித்தானியத் தொழிற்சங்க இயக்கத்தில் தொழிலாளி பியர் அருந்தச் செல்வதற்கு முன், தவருமல் தனது சந்தாவைச் செலுத்துகின்றுர் என்று கூறப்படுகின்றது. இது நல்ல விஷயம். ஆனல் இதனுல் அந்தத் தொழிற்சங்க இயக்கம் சீர்திருத்தவாதம் குறைந்ததாகி விடவில்லை,

இன்று இலங்கையிற் தொழிற்சங்க இயக்கம் சீர்திருத்தவாதச் சகதியில் மூழ்கியிருக்கின்றது. அதனை வெளியே இழுத்துப் புரட்சிகரப் பாதையில் இட்டுச் செல்வது மிகக் கஷ்டமானதோர் பணியாகும் ! □

## அறிவியற்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் இரு அமெரிக்க மருத்துவ விஞ்ஞானிகளுக்கு பரிசு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. சாதாரண ஜீன்ஸ் (genes) ஒன்கோஜீன்ஸ் (Oncogenes) என இருவகையான ஜீன்கள் கலங்களில் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் முன்பே கண்டுள்ளனர். இதில் ஒன்கோ ஜீன்ஸ் என்பதே கான்சர் வியாதி உண்டாக்க வல்லது என்றே பொதுவாக நம்பப்பட்டது. இவ்விருவர்களதும் புதிய ஆய்வுகளின் ஒன்கோ ஜீன்ஸ் என்பதும் சாதாரண, ஜீன்களைப் போன்றே கலங்களில் சாதாரண வளர்ச்சிக்கு உதவுவனவாக உள்ளன என்றும் கண்டுள்ளனர். 40 வகை அளவில், சாதாரண ஜீன்களை விட சிறிது மாறுபாடுடைய ஒன்கோ ஜீன்கள் உள்ளன என்றும்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவர்கள் கோழிக்குஞ்சுகளில் செய்துள்ள பரிசோதனைகளின் படி ஒன்கோ ஜீன்கள் கான்சரை உண்டாக்குவதில்லை எனவும் அவை கலங்களின் வளர்ச்சிக்கு தேவையானவை எனவும் அறியப்பட்டுள்ளது. ஆனல் அவை சிகரெட், மற்றும் ரேடியோ அக்டிவ் பொருட்களில் காணப்படும் கார்க்கினோஜீன்ஸ் (Carciwogens) என்பவற்றுடன் தொழிற்படுவதாலேயே கலங்களை கான்சர் கலங்களாக மாற்றுகின்றன என்றும் கண்டுபிடித்துள்ளனர். இதனுல் உண்டாகியுள்ள புதிய சிந்தனை எந்த வகையில் ஒன்கோ ஜீன்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என கண்டுபிடிக்கக் கூடியதாகவும் அடுத்த 30 வருடங்களில் கான்சருக்கான முழுச் சிகிச்சையையும் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்கின்றனர் இவ்விருவரும்.

நன்றி: ரைம்ஸ் □

## குறிப்பு

□ 19-1-90 ஆம் திகதித் 'திசை'யில் வெளியான 'நிலைமை' என்ற கவிதையை எழுதியவரின் பெயர் சிட்டு. கவனக் குறைவினுல் பெயர் விடுபட்டதற்கு வருந்துகிறோம்.

□ மருத்துவம், அறிவியல் சம்பந்தமான கட்டுரைகளை வாசகரிடமிருந்து எதிர்பார்க்கிறோம். கட்டுரைகள் தனி அரைத் தாளில் மூன்று பக்கங்களிற்கு மேற்படாது இருக்கவேண்டும்.

□ சுவையான துணுக்குகள், தகவற் குறிப்புகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

— ஆர்

## குழந்தை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு, கற்பனை என்பவற்றுடன் தொடர்புடையதாக ஆக்கநிலை உந்தலை ஏற்படுத்துதல் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. உளம் சார்ந்த நுட்பவியலுடன் இது இணைந்தது. உளம் சார்ந்த நுட்பவியல் நடிப்பின் போது மாணவரது ஆழ்மன உணர்வுகளை வெளிக்கொண்டு வருவதாக அமைதல் வேண்டும். பார்த்துப் பின்பற்றிச் செய்யும் ஒரு நடிகனை உருவாக்குதல் பாடசாலை அரங்கின் நோக்கமன்று. மாருக, ஆக்கத்திறனுடன் ஆக்கவலுவை வெளியிடும் மாணவரை உருவாக்கும் பணி இந்நாடகங்களிலே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

பௌதிக நிலைப் பட்ட ஒரு உடல் விறைப்பை அல்லது தசை நார்களின் நெருக்குவாரத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை பாடசாலை அரங்கு கொண்டிருத்தல் வேண்டும் என்ற பாரம்பரியமான கருத்தை, நவீன உளவியற் கண்ணேட்டத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. நடிகர்களின் உடலியக்கங்கள் தசை நார்களுக்கு ஓய்வுதர வேண்டும். எதிர்த் திசைகளிலே தசை நார்கள் இழுபடுவதனுல் ஏற்படும் தவிப்புக்களிலிருந்து, மாணவர்க்கு விடுதலையளித்தல் வேண்டும். தசைநார்களுக்கு ஓய்வு தரும் இதமான நிலைக்கு நாடகச் செயற்பாடுகள் அழைத்துச் செல்லப்படுவதற்குரிய உபாயங்கள், குழந்தை சண்முகலிங்கத்தின் பாடசாலை நாடகங்களிலே திட்டமிட்டு, முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

பாடசாலை அரங்கின் மிக முக்கியமான பரிமாணங்களுள் ஒன்ருக அமைவது, அதன் ''தொடர்பு'' ஆகும். சாதாரண வாழ்க்கைச் சம்பவங்கள் தரும் தொடர்பிலும் பார்க்க மிகவும் மேம்பட்ட தொடர்பை பாடசாலை நாடகங்கள் ஈடேற்ற வேண்டியுள்ளன, தொடர்பின் தொடர்ச்சி முறிவடையாத கோடு போன்று அமைதல் வேண்டும். தொடர்புக்குரிய மொழி பானது வாழ்க்கை உணர்வுக்கும், மேடை உணர்வுக்கு மிடையே சமநிலையை ஏற்படுத்துமாறு அமைக்கப்படும் இலக்கை நோக்கிய பிரதியாக்க உபாயம் கையாளப்பட்டுள்ளது.

ஒரே நாடகம் ஒவ்வொரு முறையும் மேடையேற்றப்படும் பொழுது தாம் ஒரு புதிய நாடகத்தில் நடிக்கின்றோம் என்ற உணர்வைப், பாடசாலை நாடகங்கள் ஏற்படுத்துதல் வேண்டும். பாடசாலை நாடகங்களின் வெற்றி இந்தப் ''புத்தூக்க'' உணர்விலே தங்கியுள்ள தென்றும் கூற முடியும். மீண்டும் மீண்டும் மீள்வடிவாக்கப்படக் கூடிய நெகிழ்ச்சியையும், முழுமை அடையாது, ஆனல் முழுமையை நோக்கிச் செல்லும் வடிவமைப்பையும் பாடசாலை நாடகங்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

பாடசாலை நாடகங்கள் சமூக நடைமுறைப் பொருண்மையைக் கொண்டிருத்தல் அவசியமானது. விலங்குகள் பறவைகள் முதலியவை பாடசாலை நாடகங்களில் இடம் பெற்ருலும், அவற்றினூடாக சமூக நடைமுறைப் பொருண்மை இயைபு கொண்டிருத்தல் வேண்டும். □


இலங்கைப் பல்கலைக் கழகங்களின்

**வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்**

**கல்வியாண்டு 1990 / 91**

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவைகருதி வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம் — 10-02-1990**

க. பொ. த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**கலைமாணி (B.A.) விஞ்ஞானமாணி (B. Sc.) வர்த்தகமாணி (B. com.)**

விண்ணப்பப்படிவங்களையும், விபரத்திரட்டினையும் அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**2மாத துரித மீட்டல் பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம் 10-02-90

1988 Dec, 1989 Apr. நடைபெறவேண்டிய B.A, G.A.Q. பரீட்சைகள் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும். இவற்றிற்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு: **ASTAN INSTITUTE**

166/1, HOSPITAL ROAD — JAFFNA.

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ம் மாடி)

A-17/90

# திசை

THISAI


## திசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

### பெப்ரவரி 4

பெப்ரவரி 4 இலங்கை சுதந்திரம் அடைந்த தினமாகும் இத்தினத்தில், இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றுதல், போற்றுதல் பற்றி இலங்கை அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது; அதைப் பற்றிப் பிரச்சாரம் செய்கிறது.

இத்தகைய நிர்ப்பந்தம் அதற்கேன் ஏற்பட்டுள்ளது? சுதந்திரம் என்பது ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு சுபீட்சத்தையும், சந்தோசத்தையும், ஜனநாயக மலர்ச்சியையும் தரக் கூடியதாக இருக்கவேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததிற்குப் பின்னர், இந்நாட்டு மக்கள் அத்தகைய அனுகூலத்தை அனுபவித்தார்கள் என்று சொல்ல முடியாது.

கிடைத்த சுதந்திரம், ஜனநாயகம் என்றபேரில் வாக்கு வேட்டைக்காக பேரினவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கே பாவிக்கப்பட்டது. 1956 இல் பண்டாரநாயக்காவால் வெளிப்படையாகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட பேரினவாதம், இன்று வரை இலங்கை அரசியலில் தனது இரத்தக்கறை தோய்ந்த வரலாற்றையே விரித்துள்ளது.

தமிழ்பேசும் இனத்தின் போராட்டமும் சரி, தெற்கில் ஜே. வி. பி. இயக்கத்தின் குழப்பங்களும் சரி, இவற்றின் வெவ்வேறு வகைப் பிரதிபலிப்புகளே.

இப்பிரதிபலிப்புகளின் உச்சநிலையில், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு வலுவற்றுப்போன இலங்கை அரசு அந்நிய நாட்டுப் படைகளை இங்கு தருவித்தது.

இந்தியப் படைகளின் இலங்கைப் பிரவேசம், இலங்கை பெற்ற சுதந்திரத்துக்கு ஓர் இழுக்காகவே அமைந்தது என்பது உண்மை.

இதற்கு யார் பொறுப்பு? இலங்கையின் ஆட்சி பீடத்தில் மாறி மாறிப் பதவி வகித்த அரசியல்வாதிகளே இதற்குப் பொறுப்பாகும்.

1956 இல் ஆரம்பிக்கப்பட்டு இற்றை வரை மாறி மாறி நீடிக்கப்பட்ட இப்போக்குக்கு முடிவு கட்டும் காலம், தற்போது வந்துவிட்டதாகவே தெரிகிறது.

இன்னும் இரண்டு நாட்களுள் இலங்கையின் 42 ஆவது சுதந்திரதினம் மலரவிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்ப் பகுதிகளில் வேரூன்றியிருந்த இந்தியப் படைகளும் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன தமிழ் பேசும் மக்களின் சுதந்திரப் போராட்டமானது, இந்தியாவுக்கு இலங்கையைத் தாரைவார்த்துக் கொடுக்கும் ஓர் போக்கு அல்ல என்பதும் நிரூபணமாகியுள்ளது.

ஆகவே, எதிர்வரும் பெப்ரவரி 4. இலங்கைக்கு உண்மையான சுதந்திரம் வழங்கப்பட்ட தினமாகக் கொள்ளப்பட வேண்டுமானல், தமிழ்பேசும் இனத்தின் தேசியத் தன்மை பேணப்படும் வகையில் அவர்களது மொழி, நிலம், பாதுகாக்கப்படவேண்டும். இவற்றுக்கு அடிப்படையாக அமையும் சுய நிர்ணய உரிமைக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

# அனுமதி வழங்கப்பட்டும்

## தொழிலாளர் கற்கை நெறி இல்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் இலகுவில் கல்வியைப் பெறும் வகையில், கற்கை நெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கி வருடம் ஒன்றுக்கு மேலாகியும், இதுவரை இக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவில்லையாம்.

இத்திட்டத்தின் பிரகாரம் எவ்விதமான கல்வித் தகைமையும் இல்லாத ஒருவர், பல்கலைக் கழகத்தில் மேற்படி கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்தவர்களுக்கு ஒரு கல்வியாண்டு அடிப்படைக் கல்வி வழங்கப்படும். வருட இறுதியில் இவ் அடிப்படைக் கல்வியில் சித்தி பெறுபவர்கள் பட்டப்படிப்பு வரை தம் கல்வியைத் தொடரலாம்.

பேராதனைப் பல்கலைக்கழகம் தொழிலாளர் கல்வியை முன் கூட்டியே அங்கு அறிமுகப் படுத்தி, தொழிலாளர் கற்கை நெறியைத் திருத்திகரமாகச் செயற்படுத்தி வருகிறதாம்.

இது இவ்வாறிருக்க, வேறு சில புறம்பான கற்கை நெறிகளுக்கும் அனுமதி தரப்பட்டிருந்தும், இக கற்கை நெறி ஏனும் யாழ். பல்கலைக்கழகத்தில் இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை என்பதும், குறிப்பிடத்தக்கது.

## அனுமதி வழங்க அரசாங்கம் மறுப்பு

ஜே.வி.பித் தலைவர் றோஹண விஜயவீரவின் மரணத்துடன், மர்மமான முறையில் காணமற்போன றோஹணவின் சகோதரனை ஆனந்த விஜய வீரவையும், மைத்துனர் சரத் பெர்ணண்டோவையும், அவரின் நெருங்கிய உறவினர் ஒருவரையும் கண்டுபிடிக்க உதவும்படி றோஹணவின் மாமியார் பாதுகாப்பு வட்டாரங்களைக் கேட்டிருந்தார். ஆனல், இவரின் இக் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்துள்ளன.

இது இப்படியிருக்க, தனது மகளையும், பேரப்பிள்ளைகளையும் பார்வையிட அனுமதிக்கும்படி றோஹணவின் மாமியார் அரசாங்கத்தைக் கேட்டிருந்தார். இக் கோரிக்கையையும் அரசாங்கம் மறுத்துள்ளதாம்.

றோஹண விஜயவீர மரணமாகி நான்குநாட்களுக்குப் பிறகு, தனது இளைய சகோதரனையும், மைத்துனரையும் மொறட்டுவையில் தமது வீட்டில் வைத்து, இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றுவிட்டார்களென, எச். என். பெர்ணண்டோ தெரிவிக்கிருர்.

திருமதி றோஹண விஜயவீரவின் மற்றொரு சகோதரரான டொக்ரர் சந்திரா பெர்ணண்டோவும், பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரது வீடும் இனந்தெரியாதவர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பிலும் 'போனஸ்'

வேலைவாய்ப்புக்களை இனி மேல் இன விகிதாசார அடிப்படையிலே வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, ஜனதிபதி அறிவித்துள்ளார்.

அதே வேளை, அரசியல் காரணங்கள் அல்ல, கல்வித்தராதரமும் தகுதியுமே, வெற்றிடங்களை நிரப்பும்போது கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுமென்றும் ஜனதிபதி வற்புறுத்தினர்.

அரசாங்க நாடாளுமன்றக் குழுவில் உரையாற்றும் போதே ஜனதிபதி மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

தேசிய மட்டத்தில், தேசிய விகிதாசார அடிப்படையிலும் மாகாண மட்டத்தில்,மாகாண விகிதாசார அடிப்படையிலும் மாவட்ட மட்டத்தில், மாவட்ட விகிதாசார அடிப்படையிலுமே வேலைவாய்ப்புக்கள் இனிமேல் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் விளக்கினர்.

இதற்கமைய, சிங்களவருக்கு $\frac{3}{4}$ பங்கும், தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் எஞ்சிய $\frac{1}{4}$பங்கும், வேலைவாய்ப்புக்களில் வழங்கப்படும்.

உண்மையில், சனத்தொகையில் சிங்களவர் 74 வீதம், தமிழர் 12.1 வீதம், இந்தியத் தமிழர் 5.5 வீதம், முஸ்லிம்கள் 8 வீதம், ஏனையோர் (பறங்கியர், மலாய் மக்கள் போன்ருேர்) 1 வீதம்.

ஏனையோரின் 1 வீதத்தையும் சிங்களவரின் சனத்தொகையுடன் சேர்த்து பெரும்பான்மை இனத்தின் விகிதாசாரத்தைக் கூட்டுவதாகவும், சிறுபான்மையினத்தவரில் மிகமிகச் சிறுபான்மையினத்தவரின் விகிதாசாரத்தை அநியாயமாகப் பறிப்பதாகவுமே இம்முடிவு அமைகின்றது.

நாடாளுமன்ற ஆசனங்களிலும் 'போனஸ்', வேலைவாய்ப்பிலும் பெரும்பான்மையினருக்கு 'போனஸ்' போலும்!

## நட்புறவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முஜ் நன்ட் துபேக்கும் இலங்கை அரசுக்கும் மேற்படி நட்புறவு ஒப்பந்தம் சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தையின் பெறுபேறு வெற்றிபெற்ருல் மட்டுமே இந்தியப்படை இலங்கையிலிருந்து முற்ருக வெளியேறலாம் என்ற அபிப்பிராயத்தை இந்தியா சூசகமாகத் தெரிவித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## எமது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிற்கும்போது, எம்மைப் பார்த்து சண்டையா அல்லது சமாதானமா? என்ருர்கள்; இன்று நாம் பலமாக இருக்கும்போது, சமாதானம் பேசுகிருர்கள்.''

### பழிவாங்குவது எமது நோக்கமல்ல

''ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ். ஆதரவாளர்கள் தாம் பழிவாங்கப்படலாம் என்று, அச்சம் கொள்கிருர்கள். இதுபற்றி உங்கள் கருத்து ......?''

இக்கேள்விக்குப் பதிலளிக்கையில்,

''மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை, மக்களைத் துன்புறுத்துவது எமது நோக்கமல்ல. பழிவாங்கல் நாம் செய்யப் போவதுமில்லை. சில குடும்பங்களிலிருந்து அவர்களது பிள்ளைகள் ஈ.பி.ஆர் எல்.எவ்: ஈ.என்.டி எல்.எவ். குழுக்களுடன் சேர்ந்துள்ளார்கள். இக்குழுக்களிலுள்ள சிலர் சில குடும்பங்களுடன் சமீபத்தில் திருமண உறவும் வைத்துள்ளார்கள். இப்பேர்ப்பட்ட குடும்பங்களையும், உறவினர்களையும் எம்முடன் இணைந்துச் செயற்பட முனைந்துள்ளோம்.''

''எம்மிடம் சரணடைந்தவர்களையும், எம்மால் பிடிக்கப்பட்டவர்களையும் நாம் விடுதலை செய்து வருகிறோம். ஆகவே. மற்றவர்கள் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை'' என்ருர்.

'-பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் யாழ். விஜயத்தின்போது. மணியந்தோட்டத்தில் ஈ.என் டி.எல். எவ். முகாம் தாக்கப்பட்டுள்ளதால், அதற்கும் அவரது விஜயத்துக்கும் ஏதாவது காரணகாரியத்தொடர்பு உண்டா?' என்று கேட்டதற்கு, ''எமது தாக்குதல் ஏலவே தீர்மானிக்கப்பட்ட விஷயம். இதற்கும் ரஞ்சனின் யாழ். வருகைக்கும் தொடர்புகிடையாது'' என்று அவர் பதிலளித்தார்.


## கனடாவில்

### வேலை வாய்ப்புக்கள் VACANCIES

| | | |
|---|---|---|
| ACCOUNTANTS | கணக்காளர் | 1170 CD |
| BOOK-KEEPERS | கணக்குப்பதிவாளர்கள் | 900 CD |
| CHEMISTS | இரசாயனவியலாளர்கள் | 960 CD |
| CLERICAL WORKERS | எழுதுவினைஞர்கள் | 840 CD |
| DRIVERS | சாரதிகள் | 850 CD |
| ENGINEERS | பொறியியலாளர்கள் | 1340 CD |
| ELECTRICIANS | எலக்ரிஷியன்கள் | 1110 CD |
| FOREMEN | போர்மன்கள் | 1020 CD |
| LABOURERS | தொழிலாளர்கள் | 750 CD |
| MACHINISTS | மெஷினிஸ்ற்ஸ் | 800 CD |

நேர்முகப் பரீட்சையின் பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கட்கும் ஏனைய விபரங்கட்கும் நேரில் தொடர்புகொள்க.

**AXONT AGENCY**

370, Point Pedro Road, Anaipanthi, JAFFNA

(வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)



இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 2 2 1990 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J 78/89